# பொன்னி

517

PONNI • 25-2-52 • 4 அணா

THE REGISTRAR OF BOOKS
MAR 1952
MADRAS

'நானிருக்கப் பயமேன் ?'

— காதலில் மூக்கமாலாவும் பானுமதியும்

'சீற்றம் யார் மீதோ ? எதனாலோ ?'

— சொர்க்கவாசலில் வீரப்பா

# பொன்னி

## பொருளடக்கம்

மலர் 6 | பிப்ரவரி 25, 1952 | இதழ் 2

திருவள்ளுவர் ஆண்டு 1983
மாசித்திங்கள் 13-ம் நாள்

| | | |
|---|---|---|
| மீண்டும் பரிசு | ... | 1 |
| வெற்றி யார் பக்கம்? | ... | 2 |
| மக்கள் விருப்பம் | ... | 3 |
| வேடிக்கை என்னே! | ... | 7 |
| நம்பிக்கை | ... | 10 |
| மலர் மணம் | ... | 15 |
| ஆடும் மாடும் (தொடர்கதை) | ... | 17 |
| மனோரஞ்சிதம் (சிறுவர் தொடர்கதை) | ... | 26 |
| சட்டம் சிரித்தது | ... | 31 |
| அமைதி கண்டேன் | ... | 38 |
| மாறுதல் | ... | 40 |
| வெறும் கலாட்டா! | ... | 51 |
| சிநேகிதி | ... | 54 |
| பொடி டப்பா | ... | 57 |
| பொழுதுபோக்கு | ... | 61 |

★

**பொன்னி சந்தா விவரம்:** உள்நாடு, இலங்கை ஆண்டு ஒன்றுக்கு ரூ. 6—0—0, ஆறுமாதம் ரூ. 3—0—0. வெளிநாடு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 6-12-0; ஆறுமாதம் ரூ. 3-6-0. இலங்கைக்கு வி.பி.பி. உண்டு.

## மீண்டும் பரிசு!

சென்ற இதழில் வெளியான நிழற்படத்திற்கு ஆயிரக்கணக்கான தலைப்புகளை அனுப்பி வைத்திருக்கிறார்கள் நண்பர்கள். அவற்றில் **பொருத்தமான** தலைப்புகள் பல இருக்கின்றன. பொருத்தத்தோடு **கற்பனையும் பொருள் நயமும்** மிக்க தலைப்புகளே சிந்தனையாளர் கவனத்தைக் கவரக் கூடியவை. பொருத்தம், கற்பனை, பொருள்நயம் இத்தனையும் ஒருங்கே பொருந்திய தலைப்புகள் ஒன்றுக்கு மேற்பட்டிருக்கும்போது, பரிசு பெறத் தக்க தலைப்பைத் தேர்ந்தெடுப்பது மிகப்பெரிய பொறுப்பாகி விடுகிறது. எளிதில் சிறந்த தலைப்பைப் பொறுக்கி விட அனுமதியாமல், தலைப்புக்கள் பல தங்களுக்குள் 'சரி நிகர் சமானமாக' நின்று போட்டியிடும் காட்சி நம்மைப் பரவசப்படுத்துகிறது. தமிழ் மக்கள் கற்பனை வளம் நிரம்பியவர்கள் என்று கண்டு நாம் பூரிக்க நல்ல வாய்ப்பாக இந்தப் போட்டி அமைவதால் இப்பரிசுத் திட்டத்தைத் தொடர்ந்து நடத்த முடிவு செய்திருக்கிறோம்.

இந்த இதழ் மேலட்டையைப் பாருங்கள். 'பொன் அலரி' மலர்ந்து உங்களை மகிழ்விக்கிறது. அந்த மகிழ்ச்சி உங்கள் உள்ளத்தில் எத்தனையோ கற்பனைகளை மலரச்செய்ய முடியும்! அந்தக் கற்பனைகளைக் குழைத்து இப்படத்திற்குப் பொருத்தமான **தலைப்பை** உங்களால் ஏன் இட்ட முடியாது? ஒரு அஞ்சல் அட்டையில் உங்கள் பெயர் முகவரியுடன் உங்கள் தலைப்பை எழுதியனுப்புங்கள். **5–3–52**க்குள் எங்களுக்குக் கிடைக்கும் தலைப்புகளில் சிறந்த ஒன்றுக்கு **ரூ. 5–பரிசு** அளிக்கப்படும். சென்ற பரிசுத்திட்டம் பற்றிய முடிவை மற்றொரு பக்கத்தில் காணலாம்.

# வெற்றி யார் பக்கம்?



# மக்கள் விருப்பம்

சென்னையில் காங்கிரஸல்லாத சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம் எதிர்பார்த்தபடி வெற்றிகரமாக நடந்து முடிந்திருக்கிறது. அதன்பயனாகச் சில திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு ஜனநாயக ஐக்கிய முன்னணி உருவாகியிருக்கிறது. அந்த ஐக்கிய முன்னணி உருவாவதற்குக் கம்யூனிஸ்ட்டுக் கட்சியினரும், பிரஜா கட்சியினரும், உழைப்பாளர் கட்சியினரும் காட்டிவரும் ஆர்வம் பாராட்டத்தக்கவிதத்தில் அமைந்திருக்கிறது. மற்றும் பார்வர்டு பிளாக், தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம், காமன்வீல் முதலிய கட்சிகளும் தங்கள் ஒத்துழைப்பை நல்கச் சம்மதித்திருக்கின்றன. சோஷலிஸ்டுக் கட்சிகூடச் சென்னையில் 'நிதானமாக' நடந்து கொள்வது குறிப்பிடத்தக்கது. மேலும் சுயேச்சையாளர்கள் இம் முயற்சியில் ஈடுபாடுகாட்டி மனப்பூர்வமாகப் பணியாற்றுவதும் நல்ல அறிகுறியாகும்.

இந்நிலையில் காங்கிரஸ்காரர்கள் சென்னையில் கூடித் தங்கள் தோல்விக்குக் காரணங்களை ஆராய்ந்திருக்கிறார்கள். தோல்விக்கு முழுப்பொறுப்புமேற்றுத் 'தலைமைப் பதவியை ராஜிநாமா செய்யக்கூட நான் தயார்' என்று தோழர் காமராஜர் காங்கிரஸ் ஊழியர்களிடம் 'மனந்திறந்து' பேசியிருக்கிறார். ஆனால் அதே மூச்சில் காங்கிரஸல்லாத மந்திரிசபை ஏற்படுவது சாத்தியமே அல்ல என்றும் நம்பிக்கை தெரிவித்து உற்சாகமூட்டியிருக்கிறார். காங்கிரஸ் தலைவர் நேரு, சென்னை மந்திரிசபை அமைப்புப் பற்றி விரைவில் முடிவு செய்துவிடுவாரென்றும், கல்கத்தாவில் கூடும் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்திற்குப் பின்னர்க் காங்கிரஸ் காரர்கள் நிலைமை தெளிவாகும் என்றும் தெரியவருகிறது. ஆனால் அதுவரையில் உருவாகும் ஐக்கிய முன்னணியை உடைப்பதற்குத் தங்களால் சாத்தியமான கைங்கரியங்களை யெல்லாம்

காங்கிரஸ்காரர்கள் செய்துவரு கிறார்கள்; காங்கிரஸ் பத்திரிகைகள் செய்துவருகின்றன; காங்கிரஸ் தலைவர்கள் செய்து வருகிறார்கள். தங்கள் முயற்சிகள் 'பரிபூரண' வெற்றியடையாவிட்டாலும் 'அரைகுறை' வெற்றியாவது கிடைக்கும் என்ற நம்பிக்கை அவர்களுக்குத் திண்ணமாக இருந்து வருகிறது.

ஒரிஸ்ஸாவில் சுயேச்சையாளர்கள் காங்கிரஸில் சேர்ந்து அங்கே காங்கிரஸ் மந்திரிசபை அமைவதற்கு உதவியிருக்கிறார்கள். திருவாங்கூர்-கொச்சியிலும் சுயேச்சையாளர்களையும், திருவாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியினரையும் உள்ளே இழுக்கப் பலமான முயற்சிகள் நடந்துவருகின்றன. சென்னையிலும் சுயேச்சையாளர்களும், ரங்கா கட்சியினரும் தம்மோடு சேரமாட்டார்களா என்று காங்கிரஸ்காரர்கள் ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள். எனவே காங்கிரஸ் மந்திரிசபை யமைக்கச் சந்தர்ப்பம் பார்த்திருக்கிறது என்பதைத் தவிர, துறவுவேடம் பூண்டு ஓடிவிடவில்லை என்பதைச் சம்பந்தப்பட்ட அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டும்.

இத்தகைய சந்தர்ப்பத்தில் காங்கிரஸல்லாத எம். எல். ஏக்கள் தங்கள் கடமை இன்னதென்று தெளிவாக வரையறுத்துக் கொண்டுவிட வேண்டும். தேர்தல் முடிவுகளில் வெளியான ஒரு முக்கிய உண் [illegible] நாம் [illegible] சந்தர்ப்பத்தில் எடுத்துக்காட்ட விரும்புகிறோம். காங்கிரஸ்காரர்களைத் தவிர வெற்றிபெற்றிருக்கும் மற்ற அனைவரும் அவர்கள் காங்கிரஸ்காரர்களல்ல என்ற ஒரே காரணத்தால்தான் வெற்றி பெற்றிருக்கிறார்கள். அவர்கள் கம்யூனிஸ்டுகளாயிருக்கலாம்; பிரஜா கட்சியினராயிருக்கலாம்; ரங்கா கட்சியினராயிருக்கலாம்; சுயேச்சையாளராயுமிருக்கலாம். தேர்தலில் மக்கள் இந்த 'லேபிள்'களைக் கவனிக்கவில்லை என்ற உண்மையைத்தான் எடுத்துக் காட்ட விரும்புகிறோம். காங்கிரஸைத் தோற்கடிப்பது என்ற 'வெறி' ஓட்டுகளே எதிர்த்துநின்றோர் பெட்டிகளில் நிரப்பியிருக்கிறது. இதை யாரும் மறுக்க முடியாது. எனவே வெற்றிபெற்ற யாரும் தங்கள் சொந்த பலத்தால், தங்கள் கட்சி பலத்தால் வெற்றி பெற்று விட்டதாகக் கருதக் கூடாது. ஓரளவுக்கு அவை காரணமாயினும் தேர்தலில் மக்கள் அளித்திருக்கும் தீர்ப்பு காங்கிரஸுக்கு எதிரான தீர்ப்பு என்று கூறுவதே முழு உண்மையாகும். 'யார் வரவேண்டும்?' என்று மக்கள் தெளிவாகக் கூறச் சந்தர்ப்பம் தரப்படவில்லை; தேர்தல் முடிவுகளில் அந்த விளக்கமும் இல்லை. எனவே தேர்தலில் வெற்றிபெற்ற காங்கிரஸல்லாத எல்லாச் சட்டசபை உறுப்பினர்களும், காங்கிரஸின் மீது மக்கள் கொண்ட வெறுப்பு காரணமாகவே தாங்கள் பதவிக்கு வந்திருக்கிறோம் என்

பதை மறந்துவிடக் கூடாது; மக்கள் வெறுப்புக்காளான காங்கிரஸ் மீண்டும் மந்திரிசபை அமைப்பதற்குத் துளியும் இடந்தந்தோம் என்று இருக்கக் கூடாது; காங்கிரஸல்லாத மந்திரி சபை அமைவதற்கு உதவி செய்யாவிட்டாலும் தங்களைப் பொறுத்தவரை இடையூறாக நின்றோம் என்று ஆகக்கூடாது. இக்கடமையுணர்வு காங்கிரஸல்லாத சென்னை சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் இருக்குமென எதிர்பார்க்கிறோம்.

ஜனநாயக ஐக்கிய முன்னணி உருவாவதற்குப் பல இடையூறுகள் சுட்டிக்காட்டப்படுகின்றன. திட்டங்களின் பேரில் கருத்து வேறுபாடுகள் ஏற்படுவது இயல்பு. முழுக்க முழுக்கத் தங்கள் கட்சிசார்க்கார் அமையாதபோது யாரும் தங்கள் திட்டங்கள் முழு அளவில் நிறைவேறும் என்று எதிர்பார்க்க முடியாது. ஆனால் தங்கள் கோட்பாடுகளுக்கு விரோதமில்லாதபடி குறைந்தபட்சத் திட்ட அடிப்படையில் ஒன்று சேருவது மக்கள் நல்வாழ்வில் கருத்துள்ள எவருக்கும் அரிதல்ல. ஜனநாயக ஐக்கிய முன்னணி வகுத்துள்ள திட்டங்கள் இந்த ஒற்றுமையை உண்டாக்க வழி வகுக்கின்றன என்றே நாம் கருதுகிறோம். தீவிரமான பொருளாதார மாறுதல்களில் கருத்துவேறுபாடு இருக்க முடியும். ஆனால் கள்ள மார்க்கட் ஒழிப்பு, லஞ்சஒழிப்பு, திறமையான நிர்வாகம், உணவு, உடை, வீட்டுவசதிகளைப் பெருக்குவது, பிரஜா உரிமைகளை வழங்குவது ஆகியவை போன்ற சாதாரண மாறுதல்களை எந்த நல்ல மனமுடையவரும் விரும்பத்தான் செய்வர். இந்த அடிப்படையில் ஒரு நல்ல அரசாங்கம் ஏற்படுவது பலர் நினைப்பது போல நடக்க முடியாத காரியமல்ல. காங்கிரஸ்காரர்களால்தான் நிலையான அரசாங்கத்தை நிறுவ முடியுமென்று எண்ணுவது காங்கிரஸை மைனாரிட்டிக் கட்சியாக்கிவைத்த மக்கள் தீர்ப்பையே அவமதிப்பதாகும்.

'கம்யூனிஸ்டுகளோடு கூட்டுச் சேருவது பாபகரமான செயல்' என்று சிலர் உபதேசம் செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். இந்த உபதேசம் நல்லெண்ணத்தை அடிப்படையாகக்கொண்டு செய்யப்படுவதாகவும் 'மாயாஜாலம்' காட்டுகிறார்கள். இந்த உபதேசங்களைச் செய்கிறவர்கள், மக்களை மறந்துவிடுகிறார்கள்; மக்கள் படும் துயரங்களை மறந்துவிடுகிறார்கள்; தங்கள் 'கோலாகல வாழ்வு' நிலைபெயர்ந்துவிடுமோ என்ற அச்சமே அவர்களை அப்படிப் பேச வைக்கிறது. 'அராஜகம் வரும்; ஆபத்து வரும்; சர்வாதிகாரம் வரும்' என்ற கூக்குரல், அரைவயிறும் கால்வயிறும் உண்டு நடைப்பிணங்களாகத் திரியும் கோடிக்கணக்கான இந்நாட்டு மக்களிடம் என்ன மாறுதலை ஏற்படுத்த முடியும்? அவர்கள் நிலையான, சர்வ சுதந்திரமான

இந்த அரசாங்கத்தின் அவல ஆட்சி காரணமாக எய்திப்புள்ள படுமோசமான நிலையை விட இனி எந்தப் பள்ளத்தில் யார் தான் அவர்களைத் தள்ளிவிட முடியும்! மக்கள் துயர வாழ்க்கையை மாற்றியமைக்க முடியாதவர்கள் கம்யூனிஸ்டுகளின் 'அராஜகப் போக்கு' பற்றிக் கதையளந்தால் யார் அதை நம்புவார்கள்? எனவே இந்த உபதேசம் சில பிரமுகர்களின் 'சுயஉருவங்களை'க் காட்டப் பயன்படுமே ஒழியக் கூட்டு மந்திரிசபை முயற்சியைக் குலைக்காதென்பது திண்ணம்.

மற்றொரு செய்தியும் புது எம். எல். ஏ.க்கள் கவனத்திற்குரியதாகும். மந்திரிசபையை உருவாக்கும் பொறுப்பு இன்று தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்ட 375 பேரிடம் அமைந்துவிட்டிருக்கிறதென்றாலும், அவர்கள் நினைத்தால் காங்கிரஸ் மந்திரிசபை வரும்; வேண்டாமென்றால் ஐக்கிய முன்னணி மந்திரிசபை வரும் என்ற நிலைமை இருந்தாலும், அவர்களைத் தேர்ந்தெடுத்தனுப்பிய மக்களை அவர்கள் மறந்துவிடக்கூடாது. அவர்களின் பிரதிநிதிகளாகச் செயலாற்ற வேண்டிய பொறுப்பிலேயே அவர்கள் சட்டமன்றம் வந்திருக்கிறார்கள் என்பதையும் மறந்துவிடக் கூடாது. சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு இடமளித்துக் குட்டையைக் குழப்புவதோ, எந்தப் பக்கம் சாய்ந்தால் லாபம் அதிகம் என்று ஆரூடம் பார்ப்பதோ, பொறுத்திருப்போம், பதவிக்கு வருகிற கட்சியில் சேர்வோம் என்று சந்தர்ப்பவாதியாக நடிப்பதோ, மக்கள் பிரதிநிதிகள் என்று தங்களைக் கருதுகிற எவருக்கும் அழகல்ல. மக்கள் விருப்பம் என்ன என்பதையறிந்து அதனை நிறைவேற்றித்தர முயல்வதே வாக்காளர்களின் ஆதரவைப் பெற்றவர் செய்யக்கூடிய பொறுப்பான செயலாகும். இந்தச் செய்தியை மனதில் கொள்ளும் புதுப் பிரதிநிதிகள் யாரும், எந்தவகையாலும் காங்கிரஸ் பக்கம் சேர வழியில்லை என்பதை நன்கு அறிவர். அத்துடன் காங்கிரஸ்காரர்களல்லாத மக்கள் அரசாங்கம் உருவாக உதவவேண்டும் என்பதையும் உணர்வர்.

நாம் பலமுறை குறிப்பிட்டிருக்கிறபடி சென்னை ராஜ்ய மக்கள் இந்தத் தேர்தலில் அளித்துள்ள தீர்ப்பு மகத்தானதாகும்; அந்தத் தீர்ப்பின் பயனைச் சென்னையில் காங்கிரஸ்காரர்களல்லாத மற்றவர்கள் ஒன்றுபட்டு மந்திரிசபை அமைக்கும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு சரியான பிரதிநிதித்துவம் வாய்ந்த மக்கள் அரசாங்கத்தை நிறுவ வேண்டிய பொறுப்பு காங்கிரஸல்லாத சட்டசபை மெம்பர்களைச் சார்ந்திருக்கிறது. அந்தப் பொறுப்பைச் சரிவர நிறைவேற்றுவதன் மூலம் மக்கள் விருப்பத்தை அவர்கள் பூர்த்திசெய்வார்கள் என்று பெரிதும் எதிர்பார்க்கிறோம்.

# வேடிக்கை என்னே!

காமிரா

சென்னையிலே மிகக் கோலாகலமாக நடந்துமுடிந்தது உலகப் படவிழா! விழாவுக்கு வந்திருந்த பிறநாட்டுப் படங்களைக் காட்டும் தியேட்டர்களின்முன், மக்கள் கூட்டம் நெருக்கியடித்துக் கொண்டு நின்றிருந்த காட்சி இன்றும் என் மனக்கண் முன் நிற்கிறது! சென்னையில் எங்கு திரும்பினாலும் படவிழாசம்பந்தமான பேச்சாகத்தான் இருந்தது சென்ற வாரமெல்லாம்! உலகிலுள்ள எல்லா நாடுகளும், முக்கியமாக ரஷ்யா, சைனா, ஜப்பான் அமெரிக்கா, இங்கிலாந்து, செக்கோஸ்லேவேகியா, எகிப்து, பிரான்ஸ், ஹங்கேரி, இத்தாலி போன்ற நாடுகள் தங்கள் நாட்டில் தயாரான நல்ல படங்களை அனுப்பிவைத்தோடு, தங்கள் கலைக்குழுவையும் அனுப்பி இவ்விழாவில் பங்கெடுத்துக் கொண்டன! * இவ்விழா இந்தியப் பட உலக சரித்திரத்திலேயே ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும். ஆசியாவில் நடந்த முதல் படவிழாவும் இது தான்!

ஆரம்பவிழாவைச் சென்னை தேனாம்பேட்டையில் திறந்த வெளித்தியேட்டரில் பிரதம நீதிபதி திரு. பி. வி. ராஜமன்னார் அவர்கள் ஆரம்பித்துவைத்தார்கள். வெளிநாட்டுப் பிரதிநிதிகள் அனைவரும் அன்று பேசினார்கள். ரஷ்யக் கலைக்குழுத் தலைவர் பேசுகையில், சக்திவாய்ந்த சினிமா சாதனத்தின் மூலம், இந்தியாவுக்குச், சோவியத் யூனியனுக்கும் நட்புறவு பலப்படும் என்று நம்பிக்கை தெரிவித்தது, இந்தியாவுக்குச் சினிமா யந்திர சாதனங்களையும், கலை நுணுக்க நிபுணர்களையும் அனுப்பிவைக்கச் சோவியத் யூனியன் தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டது கவனிக்கத்தக்கது. "இந்தியப் படத்தொழிலுக்கு மகத்தானதொரு எதிர்காலமிருக்கிறது" என்று பிரபல அமெரிக்க டைரக்டர் பிராங்க்காப்ரா கூறினார்.

சென்னை நகரிலுள்ள ஐந்து தியேட்டர்களிலும், தேனாம்பேட்டையிலுள்ள திறந்த வெளித் தியேட்டர்களிலும் விழாவுக்கு வந்த உலகப்படங்கள் காட்டப்பெற்றன. ஒவ்வொரு படத்தையும் காண அமோகமான கூட்டம்! எந்தப்படத்தைப் பார்ப்பது, எதைப் பார்க்காமல் விடுவது என்ற பிரச்சினை வேறு மக்களிடையே! முக்கியமாக ரஷ்யப் படங்களுக்கு ஏராளமான

உலகப் படவிழா

கூட்டம் கூடிற்று! ரஷ்யப் படங்களில் 'பெர்லின் வீழ்ச்சி' பொதுமக்களின் பாராட்டுதலைப் பெற்றது. இதில், ஸ்டாலின் ஹிட்லர், சர்ச்சில் போன்றவர்களைப்போல் மேக்கப் செய்து கொண்டு நடிகர்கள் தோன்றிய பொழுது, படம் பார்ப்பவர்களுக்குப் பிரமிப்புத்தட்டிற்று! படம்தான்பார்க்கிறோமா அன்றி உண்மைச் சம்பவங்களைத்தான் காண்கின்றோமா என்றசந்தேகம் எழுந்தது! தேனாம்பேட்டையில் விழா ஆரம்பநாளில் காட்டப் பெற்ற 'உலகத்தின் மிகப்பெரிய காட்சி' என்ற அமெரிக்கப்படம், கண்கொள்ளாக் காட்சி என்பதில் ஐயமில்லை. சர்க்கஸ் கம்பெனி யொன்றைப் பின்னணியாகக் கொண்டு எழுப்பப் பெற்றுள்ள இத் திரைக்காட்சி, கண்ணுள்ளவர் யாவரும் காண வேண்டிய மகத்தான காட்சி! மற்றொரு சீனப் படமும் என் கவனத்தை ஈர்த்தது. "எல்லாப் புகழும் உனக்குத்தான்" என்ற சீனப்படமே அது. மிகச் சாதாரண ஒரு நிகழ்ச்சியை வைத்து, பொழுதுபோக்குக்கு நாம் என்னென்ன தேவை என நினைக்கிறோமோ, அந்த ஆர்ப்பாட்டம் எதுமில்லாமல், மின்சார உற்பத்தி நிலையம் ஒன்றையும் அதன் தொழிலாளர்களையும் மட்டுமே கொண்டு பின்னப்பட்டுள்ள ஒருசாதாரணக்கதையில் திரைக்கலை என்ன சாதிக்க முடியும் என்பதற்கு அப்படம் தக்க சான்று. அடுத்தபடியாக எனக்கு மிகவும் பிடித்தது, "யுகிவாரிசு" என்ற ஜப்பானியப்படம் தான். ஜப்பானியர்கள் படதுறையில் எவ்வளவு தூரம்முன்னேறியிருக்கிறார்கள் என்பதற்குத் தக்கதொரு சான்றாக விளங்குகின்றது "யுகிவாரிசு". மூன்றே கதாபாத்திரங்களைக் கொண்டு வியக்கத்தக்க வகையில் படத்தைத் தயாரித்திருக்கிறார்கள். அதுவும், பட ஆரம்பத்தில் ஒரு மங்கையும், நான்கு வயதுச் சிறுவன் ஒருவனும்தான் காட்சியளிக்கிறார்கள். முடிவில்தான் கதாநாயகன் தோன்றுகின்றான். சிறுவனின் நடிப்பைப் புகழாத

மொழிபெயர்ப்பாளருடன் சோவியத் கலைக்குழுத் தலைவர் செமினோவ்

வர்களில்லை! படத்தில் கத்திச் சண்டைகளோ, குதிரைச் சவாரியோ, பாட்டுகளோ அன்றி நடனங்களோ கிடையாது! நல்ல நடிப்பு உண்டு! அதுவும் நான்கு வயதுச் சிறுவனின் அபாரமான நடிப்பு! அதிகமான சம்பாஷணை



ஹங்கேரி, செக் பிரதிநிதிகள்

களும் கிடையாது! முகபாவங்களின் மூலமே நடிகர்கள் தங்கள் நடிப்புத்திறனை வெளியிட்டு விடுகிறார்கள்! படத்தைப் பார்த்து வெளிவரும்போது கலை நுணுக்கமுள்ள ஒரு உயர்ந்த படத்தைப் பார்த்துவிட்டு வந்தோம் என்ற பெருமகிழ்ச்சி நம் உள்ளத்தில் குடிகொள்கிறது!

திருவல்லிக்கேணியில் கலைவாணர் என். எஸ். கே. தலைமையில் சோவியத் கலைஞர்களுக்கும், சைனா, ஹங்கேரி, செக் முதலிய நாட்டுக் கலைஞர்களுக்கும் அளிக்கப்பட்ட வரவேற்பைக் குறிப்பிடாவிட்டால், இவ்விழா பற்றிய செய்திகளை முற்றிலும் கூறியதாகாது. அங்கே திரண்டிருந்த மக்கள் வெள்ளமும், அவர்களின் ஆர்வத்தைக்கண்ட வெளிநாட்டுக்கலைஞர்களின் உற்சாக வெள்ளமும் இந்த விழாவில் மறக்கமுடியாத நிகழ்ச்சிகள்! ரஷ்யா சென்ற என். எஸ். கிருஷ்ணன், அங்கே ரஷ்ய மொழியில் பிரசங்கம்பண்ணித் தன் சாமர்த்தியத்தைக் காட்டி விட்டுவந்தார் அல்லவா? ரஷ்யாவிலிருந்து வந்திருக்கும் கலைஞர்களும் இந்த 'கலையில்' தாங்களும் நிபுணர்கள்தாம் என்று காட்டிக்கொண்டிருக்கிறார்கள். "எல்லோருக்கும் வணக்கம்" "இந்தியப் பெண்மணிகள் வாழ்க" என்று தமிழில் பேசிக் கடற்கரையில் கூடிய தமிழ்மக்களைக் குளிர்ச்சியடையச் செய்தார்கள். தேனாம்பேட்டையில் வெளிநாட்டுக்காரர்களெல்லாம் அவரவர்கள் மொழியில் பேசியிருக்க, தமிழர்கள் மட்டும் எல்லோரும் ஆங்லத்தில் பேசித் தமிழை 'அவமதித்த' குறையைக் கடற்கரைக் கூட்டம்தான் நிவர்த்தி செய்தது!

# நம்பிக்கை

புதுமைச்சித்தன்

பேனாவை வைத்துக்கொண்டு கோனாகிவிடுவோம் என்று அவர் கனவு காணவில்லை. ஆனால், பேனாவை வைத்துக்கொண்டு பிச்சையெடுக்க வேண்டும் என்றும் அவர் நினைக்கவில்லை.

—புதுமைப்பித்தன்

**எ**ழுத்தாளர் ஏகப்பிரம்மம் ஏதோ சிந்தனையில் மூழ்கியவராய் உட்கார்ந்திருந்தார். ஹும்...சிந்திக்காமல் என்ன செய்வது? வாழ்வதற்குப் பேனாவை நம்பித்தான் ஆகவேண்டும்; அல்லது, பேனாவை நம்பினால்தான் வாழமுடியும் என்றிருக்கும் போது சிந்திக்காமல் என்ன செய்வது?

நிலைத்த படைப்புகள்—வளமான கற்பனைகள்—யாவும் பூரணமான சிந்தனையிலிருந்துதானே பிறக்கின்றன? ஆனால், அப்போதைய அவர் சிந்தனை வேறு தினுசு!

வீட்டுக்காரன் வாடகை கேட்கும் ஓயாத் தொல்லை—பால்காரனுக்குப் பதில் சொல்லவேண்டிய முறை—அடுத்த வீட்டு அண்ணாச்சியிடம் கைமாற்று வாங்கிவிட்டுக் கொடுக்கத் தவறியதற்கு இனிச் சொல்ல வேண்டிய சால்ஜாப்பு — இன்னும் எத்தனையோ விஷயங்கள்!

"எழுத்தாளன் வாழ்க்கை என்ன வாழ்க்கை! சை...கவலையில்லாமல் நிம்மதியாக இருந்தால் அல்லவோ எழுதிக் கொட்டலாம்!...அதில்லாமல்... கவலையும் வறுமையும் இருந்தால்தான், கற்பனை பந்தயக்குதிரை மாதிரி பறக்குமாம்...சுத்தப் பேத்தல்! உணர்ச்சிகளை மடித்துக்கொண்டு, தன்னை ஒரு யந்திரமாக மாற்றிக்கொள்பவன்கூடச் சுகமாக வாழமுடிகிறது. அகத்தையும் புறத்தையும் உணர்ச்சிபூர்வமாக ஊடுருவிப் பார்த்து ஆராயும் ஆற்றல் படைத்த இலக்கியகர்த்தா நிம்மதியாக வாழ முடிவதில்லை!......"

அவர் உள்ளத்தில் புதையுண்டு கிடக்கும் ஆசை......அதற்கு மட்டும் குறைவே கிடையாது.

எண்ணற்ற ஆசைகளில் இடறி விழுந்து தொலையும் இந்த மனம்... அந்த ஆசைகள் நிறைவேறாமல் நீறுபூத்த நெருப்பாய்—நினைவுகளின் வெறும் நிழலாட்டமாய்—கனவாய்—கற்பனையாய்—எட்டாத நெடுந்தூர லட்சியமாய்...ஹூம் ...காலம் ஓடிக்கொண்டே இருக்கிறது...! ஆசைகள் நிறைவேற வேண்டும் என்ற காரணத்திற்காகக் காலம் காத்து நிற்குமா?...

எழுத்தாளர் என்பதிலிருந்து ஒரு பத்திரிகையின் ஆசிரியர் என்ற நிலையை எட்டிப் பிடிக்க வேண்டும்—இது ஏகப்பிரம்மத்தின் நெடுநாளைய—இல்லை, நெடுங்காலத்து ஆசை! ஆசை அல்ல, இலட்சியம்!

இலட்சியமில்லாமல் வாழ்பவனுக்கும் மிருகத்திற்கும் என்ன வித்தியாசம்?... இந்த இலட்சியத்துடன் பெரும் அளவு நம்பிக்கையைப் பிணைத்து இதுவரை

வாழ்நாளைக் கடத்திவிட்டார் அவர்.

நம்பிக்கை!

நம்பிக்கையின் அடிப்படையில்தான் உலகத்தின் அரும் பெரும் காரியங்கள் சாத்தியமாகின்றன. வரம்புக்குட்பட்ட நியாயமான ஆசை அதற்குப் பக்கபலமாக நிற்கும் நம்பிக்கை இவைகளுடன்தான் ஒவ்வொரு மனிதனும் வாழ்கின்றான்! வேறு எதுவுமின்றி நம்பிக்கை மட்டும இருந்துவிட்டால் போதும், வாழ்ந்துவிடலாம்! வாழ்வின் ஒரே ஊன்றுகோல் நம்பிக்கை!

எழுத்தாளர் ஏகப்பிரம்மம் ஒரு தினுசான பேர்வழி. அவர் நினைத்திருந்தால் குப்பை கூளத்தை யெல்லாம் இலக்கியமென்று கதைக்கும் பத்திரிகைகளில் எல்லாம் எழுதிக் குபேராகி இருக்கமுடியும்! ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. இலக்கியத் தரம்உயர்ந்த பொறுக்கான ஓரிரு பத்திரிகைகளில் மட்டுமே எழுதிவந்தார். மேலும் எழுதுவதை ஒரு உபதொழிலாக—பொழுது போக்காகக் கொள்ளாமல், அதையே பிரதான தொழிலாகக் கொண்டார். அதுதான் அவர் செய்த மகத்தான தவறு!

"சார், சார்" என்ற ஒரு குரல்!

திரும்பிப் பார்த்தார். தெரு வாயிற்படியில் தபால்காரன்! எழுந்து சென்றார். கடிதம் கைமாறியது.

கைபிலிருக்கும் கடிதத்தில் கண்ணோட்டம் செலுத்தினார்.

'மாமலர்' காரியாலயம்
சென்னை.

அன்புடையீர்

வணக்கம். வெளியிடப் போகும் "மாமலர்" சித்திரை ஆண்டு மலருக்குத் தங்கள் எழுத்தோவியத்தை அனுப்பி வைத்துச் சிறப்பிக்க வேண்டுகிறோம்.

கங்குலன்
ஆசிரியர், "மாமலர்"

கடிதம், மகிழ்வு கலந்த நம்பிக்கை ஊட்டுவதாய் இருந்தது.

"ஆண்டு மலருக்கு எழுத்தோவியம் தேவை! சுளையாக இருபது ரூபாய் இருக்கிறது"—நம்பிக்கை முளைவிட ஆரம்பித்தது.

"ஆண்டு மலருக்குக் கதை! பிரமாதமானதாக இருக்கவேண்டும்." திட்டமிட்டுக்கொண்டது மனம்.

வெற்றிலைப் பெட்டியை அருகில் இழுத்தார்; திறந்தார். அது, என்றும் போலவே அன்றும் வெற்றுப்பெட்டியாய்க் காட்சி தந்தது. தமக்குத் தெரியாமல் ஏதாவது சில்லறை கிடக்கிறதா வென்று சட்டைப் பைக்குள் கையைவிட்டுத் துழாவினார்.

அதிலும் ஒன்றுமில்லை. கண்மூடித்தனமாக யார் யாருக்கோ அமுதம் சுரக்கும் பாத்திரத்தைக் கொடுத்துத் தொலைத்த கடவுள், அவருக்கு ஒரு பணம் சுரக்கும் பாத்திரத்தைக் கொடுத்திருக்கக் கூடாதா?

எழுந்தார். துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு வெளியில் நடந்தார்!

"என்னுங்க, பழையபாக்கி மூணு ரூவா சொச்சம் மூணுமாசமா அப்புடியே நிக்கிதுங்களே, இனி யும் தாமுசம் செய்யாமே கொஞ் சம் மொகம் பாருங்க" என்று எதிர்நிற்கும் ஏகப்பிரம்மத்தைப் பார்த்து வெற்றிலைக்கடை வீரா சாமி பல்லையிளித்தான்.

"இப்போ நான் மொகத்தைப் பாக்காமே, ஒம் முதுகையா பாத் துக்கிட்டிருக்கேன்?" என்றார். ஏகப்பிரம்மம்.

"போங்க சாமி, ஒங்களுக்கு எப்பவும் வேடிக்கை வெளெ யாட்டுதான். இந்த மொடை யான சமயத்துலே குடுத்து ஒதவுனிங்கின்னு, ஒவ்வொரு காசும் ஒவ்வொரு லெச்சம்சாமி"

"அட! குடுக்காமே ஊரெ வுட்டா ஓடிடப்போறுங்க? இந்த மூணு ரூபாய்க்கு மூக்காலே அழுதுகிட்டுப் பெரிசா பேசு றியே!" கடன்காரர்களுக்குப் பதில் சொல்வதில் அவர் மிகவும் அனுபவப்பட்டவர் என்பது வீராசாமிக்கு எப்படித் தெரியும்?

"ஏதோ சீக்கிரமாப்பாத்துக் குடுங்கோ சாமி"

"ஆகட்டுமப்பா, ஒரு அரைக் கவுளி வெத்தலையும், ஒரு அணுச் சீவலும், ஒரு பொகயிலெப் பொட்டலமும் குடு." என்றார் ஏகப்பிரம்மம்.

'ஆண்டு மலர்க் கதைக்கான சன்மானம் இருபது ரூபாய். இந்த வெற்றிலைப்பாக்குக் கடனை ஒரே மூச்சில் அடைத்து விட லாம்' மனதில் முளைவிட்ட நம் பிக்கை, இலைதழைகளுடன் செழுமையாகப் படர்ந்தது.

"இஞக்க அடிக்காதீங்க, சாமி" என்றபடியே ஒரு பொட்டலத் தைக் கொடுத்தான், வீராசாமி

★

வீட்டினுள் நுழைந்த அவர். தமது ஓலைத்தடுக்காசனத்தில், அமர்ந்தார். பொட்டலத்தைப் பிரித்தார். அதில்தான் என்ன ஆவல்! அவசரம்!

அப்பாடா! வெற்றிலை போடும் கடமை முடிந்தது! இனி கற் பனை இறக்கை கட்டிக்கொண்டு ஜிவ்வென்று பறக்கும் எழுத் திலே புதுமெருகு கூடும்!

எழுத ஆரம்பித்தார். பக்கங் கள் பறந்தன! ஐந்து நிமிடம், பத்து நிமிடம்... நேரமும் விரைந் தது!

"ஒருவிதமாகக் கதை முடிந் தது. இருபது ரூபாய் நிலைத்து விட்டது!" நம்பிக்கை ஓங்கியது.

அவர் எழுதியதை ஒரு முறைக்கு இருமுறை அவரே படித்துப் பார்த்தார். சில திருத்தங்கள் இடம்பெற்றன!

"ஆஹா...கதை பிரமாதமா அமைஞ்சிருக்கே..." ஒரு பெருமிதப் புன்னகையுடன் முணு முணுத்த வண்ணம், தம் திறமையைத் தாமே வியந்துகொண்டார். இலக்கியத்தின் தரமறிந்து இலக்கிய கர்த்தாவைப் பாராட்டும் தைரியசாலிகளைத்தான் வலை போட்டுத் தேடிப் பிடிக்க பிடிக்கவேண்டியிருக்கிறதே!

மாமலர்க் காரியாலயத்தை நோக்கி அவர் கதை, தன் பிரயாணத்தைத் தொடங்கியது!

★

நாட்கள் கழிந்தன!

"மாமலர்" ஆண்டு மலர் வெளிவர இன்னும் ஒரே ஒரு வாரம்தான் இருக்கிறது.

"இன்னும் ஒரு வாரத்தில் மாமலர் ஆண்டு மலர் வெளி வந்துவிடும், அதற்கடுத்த ஒரு வாரத்தில் கதைக்கான சன்மானம் இருபது ரூபாய். சன்மானம் மட்டுமா? ஆசிரியர் பாராட்டுதலும்கூடச் சேர்ந்து தன்னை நோக்கி ஓடி வரும்" நம்பிக்கை சிதறவில்லை!

'சார் டபால்" என்ற கூக்குரலுடன் வந்தான், "த"னவை "ட"னவாக்கி உச்சரிப்பதில் விருப்பங்கொண்ட தபால்காரன்.

ஒரு கவரை எடுத்துக்கொடுத்தான். அவர் ஆச்சரியப்பட்டார்!

எங்கிருந்து கடிதம் வந்திருக்கும்? எங்கிருந்தும் இப்பொழுது நமக்கு வருவதற்கில்லையே!

ஒருவேளை 'தாமரை' ஆசிரியர் கதை வேண்டுமென்று கேட்

கிறாரோ? 'தாமரை'தான் போன மாதம் செத்து விட்டதே!... ஒரு வேளை மீண்டும் தொடங்குகிறாரோ, என்னவோ?...ஆசாமி விடாமுண்டனாயிற்றே! கவரைத் திருப்பித் திருப்பிப் பார்த்தார். கடிதம் 'மாமலர்' காரியாலயத்திலிருந்து வந்திருந்தது.

'கடிதம், மாமலர்க் காரியாலயத்திலிருந்து..உம்...ஓஹோ... ஆண்டுமலரில் நாம் எழுதிய கதைக்குச் சன்மானம் செக்காக வந்திருக்கிறது!"

'இன்னும் மலர் வெளிவரவேயில்லையே! அதற்குள்ளாகவா செக்?"

"ஒருவேளை முன்பணமாக அனுப்பியிருப்பார்."

"கதை பிரசுரமான பின் பணம் கொடுக்கவே யோசனை செய்யும் இந்த உலகத்தில், கதை பிரசுரமாவதற்கு 'முன் பணம்' கொடுக்கும் விசித்திர மனிதர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்."

"எழுத்தாளர்கள் கஷ்டம் தெரிஞ்ச மனுசன், இன்று

'மாமலர்' ஆசிரியர் என்று பாராட்டப்படும் அவர் ஒரு எழுத்தாளராக இருந்து பட வேண்டிய கஷ்டமெல்லாம் பட்டுத்தானே ஆசிரியர் ஆக இருக்கிறார். அப்படிப்பட்டவருக்கு எழுத்தாளர்களின் கஷ்டம் தெரியாமலா போய்விடும்?"

"சாதாரண இதழ்களில் வெளிவரும் கதைகளுக்கென்றால், அன்பளிப்பு எட்டு, பத்துக்கு மேல் ஏறாது! இது ஆண்டு மலர்க் கதைக்கான சன்மானம், இருபதுக்கு மோசமிருக்காது."

கவரைப் பிரித்தார். உள்ளே ஒரு கடிதம்! நெற்றி சுருங்கியது. கண்கள் விரிந்தன! நீண்ட யோசனைக்கு வழி ஏற்பட்டது. கடிதத்தைப் படித்தார்.

"அன்புடையீர்,

வணக்கம். எதிர்பாராத அச்சுயந்திரக்கோளாறின் காரணமாக "மாமலர்" ஆண்டுமலர் வெளியிடுவது தடைப்பட்டுவிட்டதென்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

கங்குலன்
ஆசிரியர் "மாமலர்"

மாமலர் ஆண்டுமலர், கதை, சன்மானம் இருபது ரூபாய் யாவும் கனவுச் சரக்கு!

இந்த ஆண்டு இல்லாவிட்டால் இன்னொரு ஆண்டு; இந்தப் பத்திரிகை இல்லாவிட்டால் இன்னொரு பத்திரிகை. நம்பிக்கை முனைமழுங்கவில்லை!

---


எவரெடி கன்பெக்‌ஷனரி ஒர்க்ஸ்
நிறுவனம் 1942ல்

உயர்ந்த ரக மிட்டாய் தினுசுகள்
சாஸ்திரீக முறைப்படி தயாரிப்பவர்கள்.
எங்களிடம் பாய்ல்டு சூட்ஸ் பான்சூட்ஸ், காரமல்ஸ்
லோஜென்சஸ் இன்னும் பலவகை மிட்டாய்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும்.

RECO Eveready SWEETS

விவரங்களுக்கு:
72, எல்லம்மன் கோயில் தெரு
மேற்கு மாம்பலம்
சென்னை-17

# மலர்மணம்

## இன்ப மலர்

பொன்னி நல்லாள் ஆயிரம் மைலுக்கப்பால் இருக்கும் என்னைத் தேடி ஒருமாத வழிப் பயணம் செய்த பிறகு, கண்முன் தோன்றிக் கவின்பெறு காட்சி தந்தாள். அட்டைப் படம் அழகுகாட்ட, உள்ளேயோ ஏடொன்று தள்ள எழிலொன்று தோன்றிற்று!

தீபாவளி மலர்களில் 'கலை' என்ற பெயரால் வெளிவரும் அழகுக் கேடான வண்ணப் படங்களையும், நமது பொங்கல் மலரில் அழகுக் களஞ்சியமாக வெளிவரும் வண்ண ஓவியங்களையும் ஒப்பிட்டுப் பார்ப்போரின் உள்ளத்தில் நம்முடைய ஓவியர்களும், அவர்களுக்கு நாம் கொடுக்கும் இலக்கியக் கருத்தை ஏட்டிலே எழுதிவைத்த பழங் காவிய மன்னர்களும் உயர்ந்த இடம்பெறுகிறார்கள். மலரில் கவிதை, கதை, கட்டுரைகள், படங்கள், எழுத்து, அச்சு எல்லாம் அழகாக அமைந்து கசங்காமலும், ஓர் அயல் நாட்டுக்கு வந்துசேர்ந்ததென்றால் அந்த மலர் ஓர் இன்ப மலர்தான்!

**நாரா. நாச்சியப்பன்**
இரங்கூன்

* * *

## வண்ணமலர்ப் பூஞ்சோலை

பொன்னி பொங்கல் மலர் வழக்கம்போல மணம் வீசிக் கொண்டு வந்தது. அழகிய உயர்ந்த பதிப்பு. பல ரசங்கள் நிறைந்த எண்ணக் குவியல்களிடையே, கலைவாணனை ஆசிரியர் பேட்டிகண்ட புதுமுறையும், இன்ன பிறவும் வண்ணமலர்ப் பூஞ்சோலையாக உள்ளம் மகிழச் செய்துவிட்டது.

**ப. தனுஷ்கோடி**
ராசிபுரம்

* * *

## பாராட்டுகிறேன்

பொன்னி பொங்கல்மலரில் 'பொற்பாவை' பாடப்பாட இனிக்கிறது. அகிலனின் 'மனமும் மானமும்' உள்ளத்தைத் தொடுகிறது. இளமைப்பித்தனின் 'கண்கள்' கண்களைக் கண்ணீர்க் குளமாக்குகிறது. காதலை அருமையான கற்பனையால் விளக்குகிறார் 'காதல்' ஆசிரியர் ராமனாதன். நாகரிகத்தின் உச்ச நிலையில் வாழாதுவாழும் ஹரன்-அவர் குடும்பத்துக்கு உழைத்து ஓடாய்ப் போனதோடு திருட்டுக் குற்றம் சாட்டப்படும் ஏழை-இவர்களின் நிலையை அழகாகப் படம்பிடிக்கிறார் சிந்தன். நினைவை விட்டு நீங்காதபடி, தனக்கே உரிய தெளிந்த தென்றல் நடையில் 'வாழும் காதலை'க் காட்டும் எஸ். ஆறுமுகம் தமிழரின் வாழ்த்துதலுக்கு—பாராட்டுதலுக்கு உரியவராகிறார். கவிதைகள் தேன்கலந்த தீஞ்சுவைப் பலாச்சுளைகள்!

**புவனை—கலைச் செழியன்**
கிரப்பாளையம்

## இதயம் கவர்ந்தது

பொன்னி பொங்கல் மலர் என் இதயத்தை வெகுவாகக் கவர்ந்தது. கண்ணனின் கருத்தோவியங்களும், கலைவாணரின் பேட்டியும், தி. மு. க. மாநில மாநாட்டு நிகழ்ச்சிகளின் புகைப்படமும் மலருக்கு மாண்பளிக்கும் முறையிலே அமைந்துள்ளன.

**ஆ. ம. வேலன்**
சிங்கப்பூர்

* * *

## எதிர்கால நல்வாழ்வு

இந்த ஆண்டு பொன்னி மலரைப் பார்த்தவுடன் மக்களின் எதிர்கால நல்வாழ்விற்கு அறிகுறியாக மலர் அமைந்திருப்பது பற்றி யாவரும் மகிழ்ச்சியடைவர்.

திராவிடர்கள் வாழ்விழந்து, பஞ்சம், பசி, பட்டினி, துன்பம் இவைகளால் பீடிக்கப்பட்டிருக்கும் நேரத்தில், பொன்னி நல்லாள் தன் இன்முகத்துடன் ஒவ்வொருவர் இல்லத்திலும் வந்து 'கவலை கொள்ளாதீர்கள்; நம்மைப் பிடித்திருக்கும் துயரங்கள் விரைவில் மறைந்துவிடும்' என்று கூறும்படியான முறையில் மலர் அமைந்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

தமிழர்களின் தனிச்சிறப்பான தமிழர் விழா அன்று பொன்னி மலரை வெளியிட்டு காட்டுக்களித்த பொன்னி நிர்வாகிகளைப் பெரிதும் பாராட்டுகிறேன்.

**எஸ். மீனாட்சிசுந்தரம்**
கோயமுத்தூர்

---

# பரிசு முடிவு

10—2—52 மேலட்டையில் வெளிவந்த நிழற்படம் குறித்து எங்களுக்குக் கிடைத்த தலைப்புகளில் கீழ்க்கண்ட தலைப்பு ரூ. 5—பரிசு பெறுகிறது.

**மனக்கோட்டையல்ல;**
**உயர் நீதிமன்றம்!**

பரிசு பெற்றவர்:
ம. வ. வத்ஸா
19, கற்பகவிநாயர் கோவில் தெரு
சென்னை 16.

மற்றும் **பாராட்டுக்**குரிய தலைப்புகளைக் கீழே தந்திருக்கிறோம்.

தலைப்பு:
**மாலுமிகளின் ஒளிமாடம்; வக்கீல்களின் சிலம்பக்கூடம்**
அமரஜீவன்
C/O எஸ். ஏ. வகாப்
ஆரணி

தலைப்பு:
**தலைநகரின் இரு புகழ் முனைகள்**
வே. தமிழ்ச் செல்வன்
3, கோபால நாயக்கன் தெரு
திருவண்ணமலை

தலைப்பு:
**'நல்வழி காட்டும் நாங்கள்'**
ஆர். இராம இராசன்
4, கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவரில்லம்
சென்னை 7.




**நடந்த சதை :**

சேகரன்–சக்கு இணை துணையாக வேண்டியவர்கள். ஆனால் சோமுவின் வலையில் சிக்கியிருந்த மோகனாவைத் தன் காதலியாக்கிக்கொள்ள சந்தர்ப்பம் தேடிக் காத்திருந்தான் சேகர்.

தன் அத்தானின் மன மாற்றத்துக்குக் காரணமான மோகனாவிடம் தன் வாழ்வைக் குலைத்துவிடாதிருக்க மன்றாடினாள் சக்கு. அவள் வேண்டுகோளுக்கு உறுதிகூறி வெளியேறினாள் மோகனா. மோகனாவைத் தான் காதலிப்பதாகச் சக்குவுக்கு அறிவித்துக் கிடந்தது சேகரனின் கடிதம். சேகரனின் அறையிலிருந்து சக்குவால் விரட்டப்பட்டு வெளியேறிய மோகனா, கனிந்த நட்பில் சுந்தரி என்ற நடிகையுடன் தங்கியிருந்தாள்.

மோகனாவைத் தேடிவந்த சேகரனிடம், "சேகர், இப்படியே நாம் எப்போதும் இருப்போமா ?" என்று ஏக்கத்துடன் கூறினாள் மோகனா. அதே கணத்தில் அங்கு தோன்றிய சோமு, "....சேகர், தயவுசெய்து போய்விடு....என் வாழ்வை மட்டும் குலைப்பதாக இருந்தால்....பழி வாங்கும் நாகமாக உருவெடுத்து நீ எங்கு சென்றாலும் படமெடுத்துத் தொடருவேன். உன் குடும்பத்துக்கு மறையாத களங்கத்தை ஏற்படுத்துவேன்...." என்று சீறினான் !

## பதினோராவது அத்தியாயம்

சோபை நிறைந்திருந்த உலகம் திடீரென்று சூன்யப் பிரதேசமாக மாறிவிட்டதை மோகனா உணர்ந்தாள். முழு உருவத்தையும் தீட்டிமுடித்து விழிகளை வரைவதற்கு முன்னால் வெடுக்கென்று ஓவியத்தைப் பிடுங்கிக் கிழித்தெறிந்ததைப் போலத் தோன்றிற்று சேகரனுக்கு.

செயலற்று நிற்கும் இருவரையும் பார்க்கப் பார்க்கச் சோமுவுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. உற்சாகத்தோடு உயரப் பறக்கவிட்ட பட்டத்தைக் குறுக்கே எங்கிருந்தோ வந்த இன்னொரு பட்டம் அறுத்து விடுவதைப் போல, இந்தச் சேகரன்...மோகனாவை அவன் வீட்டில்மட்டும் விட்டுவைக்காதிருந்தால்...! அளவுக்கு மீறிய பாரத்தை ஏற்றியதால் முறிந்து போன அச்சைப் பரிதாபமாகப் பார்க்கும் வண்டிக்காரனைப் போல, தன் தவறாலேயே சிதைந்துபோன திட்டங்களைப் பற்றிச் சிந்தித்தான். எப்படி அதை மாற்றியமைப்பது என்பதுதான் அவனுக்கு விளங்கவில்லை. முதல்நாளிரவு அவனைப் பார்க்க வந்த சினிமாக் கம்பெனி முதலாளிக்கும் அவனுக்கும் நடந்த உரையாடல் அவன் கவனத்துக்கு வந்தது.

“என்ன இன்னுமா பழுக்கவில்லை?” என்ற கேள்வியைக் கேட்டுக்கொண்டே அவர் அவனுடைய அறையில் நுழைந்தார் அப்போது.

“பக்குவம் அடைந்தால் தன்னாலே பழுத்துவிடுகிறது!” என்று பதிலளித்தான் சோமு.

இந்தப் பதில் அவரைத் திருப்திப்படுத்தவில்லை. உருண்டு திரண்டு உப்பியிருந்த அவர் முகத்தில் ஒளிந்துகொண்டிருந்த விழிகள் வேட்கையால் காய்ச்சப்பட்டு மின்னின.

“எத்தனை நாட்களாகக் காத்திருப்பது சோமு? எப்போதுதான் முடியும்?” என்று ஆத்திரத்தோடு கேட்டார்.

“ஆத்திரமும் அவசரமும் கொண்டவர்களால் எதையும் அனுபவிக்க முடியாதே!” என்று கேலியாக அவன் பதிலளித்தான்.

கொதிக்கும் எண்ணெயில் கடுகை அள்ளிப் போட்டதைப் போலானது இந்தப் பதில்.

“சோமு! நானுந்தான் பார்க்கிறேன், எத்தனையோ நாட்களாக என்னை ஏமாற்றிவிட்டீர்கள். பணம் பாழாவதைத் தவிர பலன் ஏதும் ஏற்படவில்லை. அவளை அழைத்துவந்த பிறகும் அனுப்பாமல் இருப்பது...”

இதற்கு என்ன பதில் சொல்வது என்பது சோமுவுக்கு தெரியாமல் இல்லை. ஆனால் கொடுத்த பணத்தை எண்ணிக் கீழே வை என்று அவன் கூறிவிட்டால்...? நிலவொளி வீசும் அவன் நிகழ்காலத்தில் கூடக் கிரகணம் ஏற்பட்டுவிடுமே!

"மோசம் செய்வதாக இருந்தால் மோகனவை அழைத்து வந்திருப்பேனா? இன்னும் ஓரிரண்டு நாட்கள் மனதைக் கட்டுப்படுத்துங்கள். பிறகு அவளே உங்களைத் தேடிவரச் செய்கிறேன்" என்று சமாதானம் சொல்லி அனுப்பிவிட்டான்.

இதனால்தான் விடிந்தவுடனேயே மோகனவிடம் வந்தான். இங்கு...? நடுத் தெருவிலே நாதியற்றுக் கிடந்தவள் நல்லொழுக்கம் கற்பிக்கிறாள் அவனுக்கு. எவ்வளவு விசித்திரமான மாறுதல்! இதேமாதிரி வேறு எவருக்காவது நடந்திருந்தால் வேடிக்கையாகத்தான் இருந்திருக்கும் அவனுக்கு; ஆனால் அவனிடமே நடக்கிறது. அதனால்தான்...வேதனை! விபரீதமான எண்ணங்கள் எல்லாம் அவன் உள்ளத்திலே தோன்றின. வீதியிலே கிடந்தவள் என்பதைச் சேகரனிடமே கூறி விட்டால்...? மோகன மறுக்க மாட்டாள்—ஆனல் இத்தனை நாட்களுக்குப் பிறகு சேகரன் அதை நம்பவேண்டுமே! அப்படியே அவன் அதை நம்புவதாக இருந்தாலும்......மட்டமான சரக்கு என்று மதிப்பைக் குறைத்தல்லவா போடுவான் சினிமாக் கம்பெனி முதலாளி! உண்மை உதவாக்கரையாக மாறுவதைத் தன் வாழ்வில் முதல்

தடவையாக உணர்ந்தான் சோமு.

"கடைசியாகச் சொல்லு கிறேன், சேகர். பூனையை வைத்துக்கொண்டு பால் வியாபாரம் செய்ய அவ்வளவு புத்தி அற்றவனல்ல நான். கலை காவியம் என்பதெல்லாம் கவைக்குதவாத சரக்குகள். அவைகளைக் கண்டு ஏமாறுபவன் நானல்ல. உன் திருப்திக்காக வேண்டுமானால் படம் ஏதாவது எழுது. ஆனால் மனதை மாற்றும் வேலையில் மட்டும் ஈடுபடாதே!" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

சேகர்—மோகனா! எழிலே உருவான எதிர்காலத்தை எதிர்பார்த்து ஒன்றுபட்ட அவர்கள் இருவரையும் எரிமலையின்மேல் இருக்கச் செய்துவிட்டான் சோமு. ஒத்து இருப்பதா அல்லது விட்டு விலகுவதா என்பதை இருவராலுமே முடிவு செய்ய முடியவில்லை. களிப்பிலோ கவலையிலோ தன்னை இழந்துவிடாததால் கடமையுணர்ச்சி குறையாது, காலம் தன் காரியத்திலேயே கண்ணுங்கருத்துமாக இருந்தது. உதிர்ந்து மறைந்தன ஓரிரண்டு நாட்கள்.

★

அழுது அழுது அலுத்துப் போனாள் சக்கு. நீர் வற்றியதால் பாளம் பாளமாக வெடித்துக் காணப்படும் நிலத்தைப்போலானது அவள் உள்ளம். வாழ்க்கை! எரிந்து புகைந்துகொண்டிருக்கும் ஊதுவர்த்தியாக அவன் எதிரே இருந்தது. அதன் மணத்திலே மகிழ்ந்து தன்னை மறந்திருந்தாள் அந்தப் பேதை. ஆனால் இன்று...? எஞ்சியிருந்த சாம்பலைத் தவிர வேறெதுவுமே அவள் எதிரே இல்லாமல் ஒழிந்துவிட்டது. எதிர்காலமாக இருந்த சேகரன் எப்படி இறந்த காலமாக மாறினான் என்பதை எண்ணி எண்ணிப் பார்த்தாள்.

"இப்படியே ஏக்கப்பட்டுக் கொண்டிருந்தால் என்னதான் அக்கா நடக்கும்?" என்று ஒரு நாள் வாசு அவளைப் பார்த்துக் கேட்டான்.

தன் துன்பத்திலே பங்கு கொள்ளும் அந்த ஒரே ஜீவனைத் துயரத்தோடு நோக்கினாள் அந்தத் துர்ப்பாக்கியவதி. தன் முன்னாலே கவிந்திருந்த இருள் அவனுக்குத் தென்படாமல் போனது ஏன் என்பது அவளுக்குப் புரியவில்லை.

"இப்படித் தவிக்கவிட்டுப் போய்விடுவார் என்று நான் நினைக்கவில்லையே, வாசு!" என்று பதிலளித்தாள் சக்கு.

அந்தப் பதிலில் இருந்த ஏக்கத்தையும் கவலையையும் வாசுவால் உணர முடியவில்லை.

"உதறித் தள்ளிவிட்டு ஓடிப் போன..."

"வாசு..." என்ற ஆத்திரம் நிறைந்த குரல் அதற்குமேல் சொல்ல முடியாமல் அவன் வாயை அடைத்துவிட்டது.

தன் அக்காளின் முகத்தைப் பார்த்தான். முந்தானையால் முகத்தை மூடிக்கொண்டு தேம்பியழத் தொடங்கினாள் அவள்.

"தெரியாமல் சொல்லிவிட்டேன், அக்கா. என்னை மன்னித்துக்கொள்" என்ற சொற்கள் அவனையறியாமலே வெளி வந்தன.

அந்தச் சிறுவனுடைய உள்ளத்தில் மட்டும் சிந்தனை அலைகள் லேசாகத் தோன்றாமல் இல்லை. இவ்வளவு ஆறுதல் சொல்லியும் அவள் அழுவதற்குக் காரணம்...? ஒருவேளை அவனைக் காப்பாற்ற முடியாத அளவுக்கு வயதில் குறைந்தவனாக இருக்கிறோம் என்று நினைக்கிறாளோ என்று சந்தேகப்பட்டான்.

"அக்கா!" என்று அன்போடு அழைத்தான். கண்ணீரைத் துடைத்துவிட்டு அவனைப் பார்த்தாள் சக்கு.

"உன்னைக் காப்பாற்ற யாருமில்லை என்று கவலைப்படுகிறாயா? யார் உன்னைக் கைவிட்டாலும் நான் இருக்கிறேன் கடைசிவரையில் உன்னைக்காப்பாற்ற" என்று சொல்லிமுடித்தான்.

அணைத்து ஆதரவளிக்கும் அன்னையின் அன்பு அவனுடைய கள்ளங்கபடமற்ற முகத்தில் ஒளிவிட்டது. அதுவரையில் ஒதுங்கியிருந்து உறவாடிவந்த இரு இதயங்களும் ஒன்றோடொன்று இணைந்து முடிச்சுப் போட்டுக்கொண்டன. ஒளிபட்டு மின்னும் தெள்ளிய நீரோடையில் நீந்தி மகிழும் மீன் குஞ்சுகளைப் பார்க்கும்போது தோன்றுகின்ற நிர்மலமான மகிழ்ச்சி அவர்கள் இதயங்களில் தோன்றி அவைகளை மலரச் செய்தது.

"அம்மா!" என்ற குரல் கேட்டது. இருவரும் திரும்பிப் பார்த்தார்கள். விரைந்து செல்லும் பசுவை நோக்கி வேகமாக ஓடிச் சென்றது கன்று. திரும்பித் தன் சேயைப் பார்த்த அந்தத் தாயின் விழிகள்......வாசுவின் அந்தப் பார்வையை உரித்தெடுத்து வார்த்ததைப்போலத் தென்பட்டன அவை. அருகே வந்த கன்றை ஆசையோடு நாவால் தடவிக்கொடுத்தது பசு.

"அந்தப் பசுவுக்குத்தான் தன் கன்றின்மேல் எவ்வளவு அன்பு இருக்கிறது பார்த்தாயா, வாசு?" என்றாள் சக்கு.

"பலன் என்ன அக்கா? பசு கன்றுக்குப் பால் கொடுத்தாலும் அந்தப் பால்காரன் இடங்கொடுக்கமாட்டானே; மனதில் அன்பு இருந்தால் மட்டும் போதுமா?" என்றான் வாசு.

"நமக்காகத்தானே, வாசு, அவன் அப்படி நடந்துகொள்ள வேண்டியிருக்கிறது?" என்றாள் சக்கு.

வாசு சிறிது நேரம் சிந்தித்தான். பிறகு என்ன அவனுக்குத் தோன்றியதோ தெரியவில்லை.

"கன்றுக்காக இருக்கும் பாலைத் திருடுவதால்தான் நாம் பசுவைப் பூசைசெய்து ஏமாற்றுகிறோமோ?"

"சீ! பைத்தியம்! பசு நம்முடைய தெய்வம்; அதனால்தான் அதைப் பூசிக்கிறோம்." என்றாள் சக்கு.

இந்தப் பதில் வாசுவுக்குத் திருப்தி அளிக்கவில்லை. அவனுடைய இளம் உள்ளம் அந்தக்

கன்றுக்காகப் பரிந்து பேசுவதிலேயே கவனம் செலுத்திற்று. எப்படித்தான் அந்த எண்ணம் அவனிடத்தில் தோன்றியதோ தெரியவில்லை. முதலில் அதை எப்படித் தன் அக்காளிடம் சொல்வது என்று அச்சமடைந்தான்—முடிவில் சொல்லியே விட்டான்.

"அந்தத் தெய்வத்திடம் கூடத் திருடுகிறோமே, அக்கா! நாம் செய்கிற புரட்டு, பூசை செய்வதாலேயே மறைந்து விடுமா?"

சக்கு திகைத்துப் போனாள். வயதுக்கு மீறிய விஷயங்களைப் பேச வாசு கற்றுக்கொண்டு விட்டான் என்பதுதான் அவளுக்குத் தோன்றிற்று.

"இதெல்லாம் பாவம், வாசு. இப்படியெல்லாம் பேசக் கூடாது" என்பதைத் தவிர வேறு எதுவும் சொல்லத் தெரியவில்லை அவளுக்கு.

எது பாவம் என்று நீண்ட நேரம் சிந்தித்துப் பார்த்தான் வாசு. கடைசியில் அவன் அக்காளே சொல்லிவிட்டதால் அது பாவமாகத்தான் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு அங்கிருந்து அகன்றான்.

நாசத்தையும் நவியையும் உணராத நாட்கள் கழிந்து கொண்டே இருந்தன. பள்ளிக்கூடம் போகிற நேரத்தைத் தவிர மற்ற நேரமெல்லாம் சக்குவுடனேயே காலங்கழித்தான் வாசு. நினைவுகளைத் தேங்கவிடாமல் தொடர்ந்து பல விஷயங்களைப் பற்றி வாசு அவளோடு பேசிக் கொண்டே இருந்ததால் ஓரளவுக்கு நிம்மதி கிடைத்தது சக்குவுக்கு.

ஒருநாள் சக்கு வாசுவிடம், "நான் ஒன்று சொல்லுகிறேன், செய்கிறாயா வாசு?" என்று கேட்டாள்.

தன் அக்காள் எப்போதுமே முன்னுரையோடு தன்னோடு பேசிப் பழகாததால், வாசுவுக்குத் திகைப்பேற்பட்டது.

"நீ சொல்லி நான் எதைக் கேட்கவில்லை, அக்கா?" என்று கேட்டான்.

"முதலில் செய்கிறேன் என்று சொல்லு; பிறகு விஷயத்தைக் கூறுகிறேன்" என்று வற்புறுத்தினாள் சக்கு.

"சொல் அக்கா; எதுவாக இருந்தாலும் செய்கிறேன்" என்றான் வாசு.

சக்கு தன் கழுத்தில் இருந்த சங்கிலியைக் கழற்றி அவன் கையில் கொடுத்தாள்.

"இதை எங்கேயாவது அடகு வைத்து, பணம் வாங்கி வருகிறாயா, வாசு?" என்றாள்.

மின்னிக்கொண்டிருந்த அந்தப் பொன் சங்கிலியைப் பார்க்க வாசுவுக்கு அழுகை அழுகையாக வந்தது. 'உலகம்' என்ற புத்தகத்தை உணராதவன் அல்ல அவன். கால் பகுதியைப் படித்துமிருக்கிறான். கடைசி அத்தியாயம் வேண்டுமானால் கற்பிக்கப்படவேண்டிய பகுதியாக இருக்கலாமே தவிர, முதல் நான்கைந்து அத்தியாயங்கள் அவனால் படிக்கப்பட்டு மனப்பாடமும் ஆனவை.

"அக்கா!" என்று குரல் கொடுத்துக் கொண்டே தலையை நிமிர்த்தினான் சக்குவின் விழிகளிலும் நீர் துளிர்த்திருந்தது.

"வீட்டுக்கு என்று ஒரு ஆண்பிள்ளை இல்லாவிட்டால் பணம் எங்கிருந்து கிடைக்கும், வாசு?" என்றாள் சக்கு.

சங்கிலியை எடுத்துக் கொண்டு போன வாசுவுக்கு என்னென்னவோ நினைவுகள் தோன்றின. தன் அக்காளைப் பற்றிக்கூட அவன் நினைக்கவில்லை; அத்தானைப்பற்றி எண்ணினான். இப்படித் தவிக்கவிட்டு ஓடிப்போன அந்த மனித மிருகத்தை ஏன் இவள் நினைத்து நினைத்து ஏங்க வேண்டும் என்ற கேள்விக்கு விடை தேடித் தேடிப் பார்த்தான். விளக்கத்துக்குட்படாத அந்தப் பிரச்சினை அவன் அறிவுக்கு விலகி இருந்ததே தவிர நெருங்கவே இல்லை.

★

அன்று சேகரன் வெளியே போயிருந்தான். வெளி வராந்தாவில் நின்றுகொண்டு வெறிச்சென்ற பார்வையோடு எதிலோ ஈடுபட்டிருந்தாள் மோகனா.

"இமைகளை அசைக்காமல் பொருள்களைப் பார்க்கப் பழகிக் கொள்ளுகிறாயா, அக்கா?" என்று கேட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தாள் சுந்தரி.

இந்தப் பதிலை ரசிக்கும்படியான நிலையில் மோகனா இல்லை. மௌனமாக அவளைப் பார்த்தாள்.

"அக்கா! நீ என்னோடு இது வரை நிறையப் பேசியிருக்கிறாய். இன்று நான் உன்னோடு அதிக நேரம் பேசவேண்டும் என்றே வந்திருக்கிறேன். தினந்தினம்

இப்படிக் கவலைப்பட்டுக் கொண்டே இருப்பது என்று தீர்மானித்துவிட்டாயா?" என்றாள் சுந்தரி.

"களிப்படைய என்ன இருக்கிறது?" என்று எதிர்த்துக் கேட்டான் மோகனு.

"எவ்வளவோ இருக்கிறது! வாழ்நாளில் பெரும் பாகத்தைக் கழித்த முதியவர்கள் கூட மகிழ்ச்சியோடு இருக்கிறார்களே! வாடாத மலரான நீ மட்டும் ஏன் வருத்தப்படுகிறாய்? பைத்தியமே! மயில் ஏன் இருக்கிறது—கண் படைத்தவர்களுக்காகத்தானே! குயில் ஏன் கூவுகிறது—கேட்க முடிந்தவர்களுக்காகத்தான்! பசுமை நிறைந்த வயலும் இளமை பொங்கும் நிலாவுள்ள நீலவானும் இருப்பானேன்—ரசிக்கும் இதயம் படைத்தவர்களைத் திருப்திப்படுத்துவதற்காகத்தான்! இருண்ட குடிசைகளும், மருண்ட வாழ்வு வாழும் மக்களும் ஏன் வாழுகிறார்கள்—சிந்திக்கத் தெரிந்தவர்களுக்கு வேலைகொடுக்கத்தானே! எல்லாம் இருக்கிறது அக்கா, இந்த உலகத்தில் மனிதனைத் திருப்திப்படுத்த. ஆனால் எதற்காகவும் இல்லாது தனக்காகவே வாழும் மனிதனால் அவற்றால் மகிழ்ச்சியடைய முடிவதில்லை!"

கருத்தும் கலநயமுங் கொண்ட இந்த நீண்ட பேச்சை ஜீரணிக்க மோகனுவுக்கு நெடுநேரம் பிடித்தது. புரிந்த பிறகு அந்த அதிசயமான உண்மைகள் அவளை ஆச்சரியத்துக்குட்படுத்தின. செம்மைப்படாமல் சேற்றிலே புரளுபவள் என்று அவளால் மதிக்கப்பட்ட அந்தப் பெண் உதிர்த்துவிட்ட உண்மைகள்...

"என்ன இருந்தாலும் அதை அனுபவிக்க, தலைவிதியிருக்க வேண்டாமா, சுந்தரி?" என்று கேட்டாள் ஏக்கத்தோடு.

"விதியாவது தலை எழுத்தாவது? இதையெல்லாம் நீ நம்புகிறாயா, அக்கா? எதிர்பாராது ஏற்படும் தோல்வியை மறைக்க எல்லோரும் இந்தச் சொற்களிடம் சரணடைகிறார்கள். ஆனால் இவற்றால் வேதனையை மறக்கச் செய்யமுடியுமே ஒழிய மாற்றியமைக்க முடிவதில்லை."

"அப்படியானால் நீ கடவுள் செயல் என்று எதுவுமே இல்லை என்கிறாயா, சுந்தரி?"

"நீ கடவுளைப்பற்றித் தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறாய், அக்கா! கடவுள் ஒரு கற்பனை."

"என்ன?"

"முழுவதுந்தான் கேளேன். எந்த இலட்சியமுமே கற்பனையாகத்தானே இருக்கமுடியும். அது காரியமாக நிறைவேறிவிட்டால் இலட்சியமாகாது. கடவுள் என்பது மனித சமுதாயம் தான் அடையவேண்டும் என்பதற்காக அமைத்துக்கொண்ட ஒரு உன்னதமான இலட்சியம். உயர்ந்த பண்புகள், ஒழுங்கு, ஒழுக்கம், திறமை, தேர்ச்சி ஆனவைகளின் கூட்டுச்சரக்குத் தானே கடவுள் என்பது! அந்த இலட்சியத்தை அடையவேண்டும் என்பதுதான் கடவுளைக் கற்பித்ததற்குக் காரணம்!"

தன் மூளை அணு அணுவாகப் பிரிந்து தனித்தனியே இயங்குவதைப்போலத் தோன்றிற்று மோகனாவுக்கு. யாரோ அதைக் குடைந்துகொண்டிருந்தார்கள்.

"அப்படியானால் ஏன் எவரும் அடையவில்லை, சுந்தரி?" என்று கேட்டாள்.

"மனிதர்கள் செய்த மாபெரும் தவறுகளில் இதுவும் ஒன்றுதான், அக்கா. எதற்காக இதை உண்டாக்கினோம் என்பதே புரிவதில்லை மனிதனுக்கு. அதனால் கல்லையும் மண்ணையும் கடவுளாக்கினானே தவிர, தன்னைத்தானே கடவுளாக்கிக் கொள்ள மறந்துபோனான்!"

"இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும், சுந்தரி?" என்று கேட்டாள் மோகனா.

"துடிக்கத் துடிக்க வாட்டி வதைக்கப்படுபவர்கள், எதிர்க்கும் சக்தியை இழந்துவிடும்போது சிந்திக்கத்தொடங்கி விடுகிறார்கள், அக்கா. சுகவாழ்வு நடத்துபவர்களில் நானும் ஒருத்தியாக இருந்தால் சொர்க்க வாயிலைத் தேடிக்கொண்டுதான் இருந்திருப்பேன் — இல்லாவிட்டால் உன்னைப்போலச் சூன்ய வெளியைப் பார்த்துக்கொண்டிருப்பேன்."

"இவ்வளவு தெரிந்தும் கூடவா நீ......?"

ஒரு விநாடி தடுமாறிப் போனாள் சுந்தரி; பிறகு எப்படியோ தன்னைத்தானே சமாளித்துக்கொண்டாள்.

"நாதியற்றவர்களால் நல்ல விதமாக நடந்துகொள்ள முடிவதே இல்லை, அக்கா. வயிற்றை முன்னிறுத்தி வாழ்வு நடத்த வேண்டியவர்கள் மனதைத் தளரவிடாமல் எப்படி இருக்க முடியும்? ஒழுக்கத்தோடு வாழ உபதேசங்களைத் தெரிந்து கொள்ளுவது மட்டும் போதாது—உரமுள்ள உள்ளமும் தேவை!"

இதைக்கேட்ட பிறகு சுந்தரியிடம் அளவுக்கு மீறிய மதிப்பு ஏற்பட்டது மோகனாவுக்கு.

"சுந்தரி! நல்ல உள்ளம் படைத்த நீ கூடவா இப்படிப் பட்ட நாசத்தின் நடுவே இருந்து நலியவேண்டும்?" என்று கேட்டாள்.

"குற்றம் கலைஞர்கள் மேல் இல்லை, அக்கா. கலைக்கு விலை கொடுப்பவர்கள் காமுகர்களாக இருக்கிறார்கள். அழுகிப்போன உள்ளம் படைத்தோர் கையில் சிக்கினால் ஆசிரமங்கள்கூட ஆபாசக் கூடங்களாகத்தானே மாறும்!"

இதற்குமேல் பேச அந்த இரு பெண்களுக்கும் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. மாலைக் கதிரவன் மறைவதற்கு முன்னாலேயே நிலா வானத்துக்கு வந்துவிட்டது. அந்த மங்கிய ஒளியில் வெளிறிப்போய்ச் செல்வாக்கிழந்து காணப்பட்ட நிலாவையே நெடுநேரம் பார்த்துக் கொண்டு நின்றனர் இருவரும்.

(தொடரும்)




## 2. கோரக்கிழவனின் குளிர்ந்த குரல்!

சிறுவர்
தொடர் நாவல்

அந்த மனோரஞ்சிதச் செடியடியில் இந்த மனோரஞ்சிதம் எப்படி முளைத்தாள்?...எப்படி முளைத்தாளோ?...அதெல்லாம் பின்னுரை!

அப்படி இப்படியென்று பத்து ஆண்டுகள் பாய்ந்து பறந்து போயின!

ஒருநாள் மாலை, மேற்றிசை அடிவானத்தை ரத்தமாய்க் கக்கிக் கக்கி ரத்தச்சிவப்பாய் ஆக்கிக்கொண்டிருந்த மாலைச் சூரியன், கொஞ்சம் கொஞ்சமாகச் செத்துக்கொண்டிருக்கும் நேரம்!

பட்டுடையுடுத்தி, நட்டு நகையணிந்து, ரெட்டைக் குதிரை பூட்டிய கோச்சுவண்டியில் ராஜாத்திமாதிரி அமர்ந்துகொண்டு, பள்ளிக்கூடத்திலிருந்து பங்களாவுக்குத் திரும்பிக்கொண்டிருந்தாள் மனோரஞ்சிதம்.

வரும்வழியில் ஒரு சம்பவம் நடந்தது; முடிந்தது!

அதென்ன சம்பவம்?

அந்தச் சம்பவத்தினால் மனோரஞ்சிதத்தின் பிஞ்சு நெஞ்சத்தில் என்றுமில்லாத நிம்மதி ஏற்பட்டது; காணாத களிப்பு மலர்ந்தது.

சற்று நேரத்திற்குள், கோச்சுவண்டி பங்களா வாசலில் வந்து நின்றது. மனோரஞ்சிதம் வண்டியை விட்டிறங்கினாள். தனது

வருகைக்காக வராந்தாவில் நின்று வழிமேல் விழியழுத்தி நிற்கும் தன் அருமை அம்மா, சாமந்தியம்மாளைக் கண்டதும், "அம்மா!..." என்று கூவிப் பறந்தோடினாள். சாமந்தியம்மாளும் மகிழ்ச்சி நிரம்பிய மனத்துடன் "அடி, என் தங்கக்கட்டி!..." என்று கூவிப் பாய்ந்தோடினாள். மனோரஞ்சிதத்தை இருகைகளாலும் வாரியெடுத்தாள், மார்போடு அணைத்துக்கொண்டாள்; உச்சி மோந்தாள்; முத்தமாரி பொழிந்தாள்; கொஞ்சினாள்; குலாவினாள்; இவ்வளவும் நடந்தபிறகு, மனோரஞ்சிதத்தின்மீது தாம் அணிவித்திருந்த ஒரு நகைகூட இல்லாமலிருப்பதைக் கண்டாள்; கண்டதும் கதி கலங்கினாள்; மதி மருண்டாள்; திகைத்தாள்; பயந்தாள்! பின்னே?...... மனோரஞ்சிதத்தின் அழகுக்கு அழகுசெய்ய அணிவித்திருந்த தங்க நகைகள் ஏறக்குறைய இரண்டாயிரம் ரூபாய் மதிப்புள்ளவை ஆயிற்றே! முப்பத்திரண்டாயிரம் அணாக்களாயிற்றே! மூன்று லட்சத்து, எண்பத்திநாலாயிரம் தம்பிடிகளாயிற்றே! ஓர் ஏழை, சுமார் இரண்டு வருடங்களுக்குப் பசியின்றி வாழப் போதுமான சொத்தாயிற்றே! கொஞ்சமா, நஞ்சமா? இரண்டயிரம் ரூபாய்! அம்மாடி!...

"மனோரஞ்சிதம்!......எங்கேயம்மா நகைகள்?..." அம்மா பதறினாள்!

"இதோ!......"—அம்மாவின் பிடியிலிருந்து விடுவித்துக்கொண்டு, கோச்சு வண்டியிலிருந்த மனோரஞ்சிதத்தின் புத்தகப் பையை எடுத்துக்கொண்டு அப்போதுதான் அங்கு வந்த வண்டிக்காரனிடம் ஓடினாள் மனோரஞ்சிதம். அவனிடமிருந்த புத்தகப் பையை வாங்கினாள். அதனுள், தனது பட்டுக் கைக்குட்டையில் முடிந்துவைத்திருந்த நகைகளை எடுத்தாள்; அம்மாவிடம் கொடுத்தாள். அம்மா விஷயம் புரியாமல் பரக்கப் பரக்கவிழித்துக்கொண்டே நகைகளை வாங்கிக்கொண்டாள். ஏதோ சொல்வதற்காகச் சமயத்தை எதிர்பார்த்தபடி 'கம்'மென்று நின்றுகொண்டிருந்த மனோரஞ்சி

தத்தைச் செல்லமாகத் தூக்கி மடியின் மீது அமர்த்திக்கொண்டாள். வாசனைத் தைலமிட்டுப் படியப் படிய அழுத்தமாக வாரிப் பின்ன விட்டிருந்த மனோரஞ்சிதம் தலையை அன்பாக வருடிவிட்டுக் கொண்டே சாமந்தியம்மாள் கேட்டாள்.

"ஏன் கழற்றி வைத்திருக்கிறாய்?"

"கேளம்மா..." என்று மனோரஞ்சிதம் கொஞ்சிக் கொஞ்சிச் சொல்லலானாள் :

"அம்மா, பள்ளிக்கூடம் விட்டு வரும் வழியில் சாக்கடை ஓரங்களிலும், பாதையோரங்களிலும் எத்தனை எத்தனையோ பையன்களும், பெண்களும் நகை, நட்டு, துணிமணி எதுவுமின்றி விளையாடிக்கொண்டிருப்பதைப் பார்த்தேனம்மா. இன்று போலவே எத்தனையோ நாள் பார்த்துக்கொண்டே வருகிறேன். அதென்னவோ, எனக்கும் அவர்களோடு சேர்ந்து சந்தோஷமாக விளையாட வேண்டும் என்று ஆசையாக இருந்தது. இந்த ஆசை எனக்கு ஏழெட்டு நாளாகவே இருந்துவந்தது. இன்று எப்படியும் அவர்களோடு ஓர் பத்து நிமிஷமாவது விளையாடி விட்டுத் தான் வீட்டுக்குப் போகவேண்டும் என்று எண்ணிக் கொண்டு, பள்ளிக்கூடம் முடியும் நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்.

"அம்மா, பள்ளிக்கூடம் முடிந்ததும், அவசர அவசமாக வண்டியிலேறிக் கொண்டு அந்த ஏழைத் தம்பி தங்கைகள் விளையாடும் இடத்திற்கு அருகில் வந்ததும், வண்டியை நிறுத்தச் சொல்லிவிட்டு இறங்கினேன். அப்போதும் அங்கு குடிசைகளின் ஓரத்திலிருக்கும் சாக்கடையோரங்களில் கும்மியடித்து விளையாடிக் கொண்டிருந்த தங்கைகளிடம் ஓடினேன். அவர்களின் கும்மி விளையாட்டில் என்னையும் சேர்த்துக்கொள்ளச் சொல்லிக் கனிவுடன் கேட்டேன்...

"அம்மா, என் குரலைக் கேட்டதும் சட்டென்று திரும்பி என்னைக்கண்டார்கள் அவர்கள். அவ்வளவுதான்! அடுத்த வினாடியே "அய்யோ, பணக்காரி! அய்யோ, பணக்காரி!" என்று அலறியடித்துக்கொண்டு ஆளுக்கொரு பக்கமாகப் பறந்தோடி விட்டார்களம்மா! எனக்கு ஒன்றும் புரியவில்லை; ஆமாம் அம்மா, எனக்கு ஒன்றுமே புரியவில்லை! ஏமாற்றமும், ஆச்சரியமும் அடைந்து திரும்பினேன். நேரே வண்டியில் வந்தமர்ந்தேன். வண்டி கிளம்பியது. என் மனந் தாளாமல் வண்டிக்காரனை நோக்கி "என்னைப் பணக்காரி என்று கேலி பண்ணினார்களே! என்னைக் கண்டதும் அப்படிப் பயந்து பறந்தோடிப் போனார்களே! ஏன்? எதற்காக?" என்று கேட்டேன் அம்மா. அதற்கு வண்டிக்காரன்,

"உன்னுடைய சிலுசிலுக்கும் பட்டு உடைகளும், பளபளக்கும் பொன்னாபரணங்களும், படோடோபமான இந்தக் கோச்சு

வண்டிப் பிரயாணமுந்தான் உன்னைப் பணக்காரி என்று காட்டிக் கொடுத்து விட்டன. பணக்காரன் என்றால், ஏழைகளின் இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கிறவன் என்ற பயங்கர விளக்கமே ஏழைகளுக்குப் பழகிப்போன உண்மை. அதனால்தான் உன்னைக் கண்டதும் பயந்து பதறியோடிப் போனார்கள்" என்றாளம்மா.

"அம்மா, இனிமேல் நானும் ஏழையாகவே ஆகிவிடப் போகிறேனம்மா. எப்படியும் அந்தப் பிள்ளைகளோடு நானும் விளையாடத்தான் வேண்டுமம்மா. ஏனம்மா, நகை, நட்டு, எதுவுமின்றிப் போனால் பள்ளிக்கூடத்தில் சேர்த்துக்கொள்ளமாட்டார்களா, என்னம்மா?......அதற்குத்தான் இப்போதே நகைகளையெல்லாம் கழற்றிவிட்டேன். இனி எனக்குப் பட்டுச்சட்டையும் வேண்டாம், கோச்சு வண்டியும் வேண்டாம். பஞ்சுப் பாவாடை கட்டிக்கொண்டு, கால்நடையாகவே நடந்து பள்ளிக்கூடம் போகப் போகிறேனம்மா. என் கூடப் படிக்கும் பொன்னிகூட அப்படித் தானே வருகிறாள். என்னம்மா, இனி அப்படியே செய்யட்டுமா?" கணகண என்று கிணிகிணி ஓசையைப் போலப் பேசித் தீர்த்த மனோரஞ்சிதத்திற்கு 'மூசுமூசு' என்று இளைத்தது.

திருக்குறள் போன்ற தம் அருமை மகளின் சமத்துவமான எண்ணங்களை ஆசைகளை—நினைவுகளை—அறிந்த சாமந்தியம்மாளுக்கு உடல் குளிர்ந்தது, உயிர் குளிர்ந்தது. அவள் மனோரஞ்சிதத்தை இறுக அணைத்துப் பல முத்தங்களிட்டாள். அவ்வளவும் ஆசை முத்தங்கள்!

"அடி என் சூரிய வடிவே! உன் ஆசையைப் போலவே செய்யலாம்" என்றாள் அம்மா. மனோரஞ்சிதத்தின் இளம் உள்ளம் மகிழ்ச்சிப் பெருக்கினால் ஓர் 'அந்தர்பல்டி' அடித்தது! அவள் கைகொட்டிக் கெக்கலித்துக் குதூகலமாய்ச் சிரித்தாள்!

'நாம் சொன்னதையெல்லாம் இக்குழந்தை அப்படியே உருப் போட்டு ஒப்புவித்துவிட்டதே! பணக்காரனை ஏசிப் பேசியதாக எஜமானியம்மாள் நம்மை என்ன செய்வாளோ?' என்று எண்ணி இத்தனை நேரம் அங்கு ஒரு மூலையில் நின்று நடுங்கிக்கொண்டிருந்த கோச்சுவண்டிக்காரன் 'அப்பாடி! பிழைத்தோம்!' என்று நெட்டுயிர்த்துச் சிரித்தான்!

ஆயிற்று! கணக்காகப் பத்து நாட்கள் பாய்ந்து பறந்தோடிப் போயின! பதினோராம் நாள் மாலை. பங்களாவுக்குப் பின் புறத்திலுள்ள பூந்தோட்டத்தில்—

மனோரஞ்சிதம் தன்விருப்பப்படி தோழிகளாய்த் தேர்ந்தெடுத்துக்கொண்ட ஏழைத் தங்கைகளுடன் ஆனந்தமாய்க் கண்ணாமூச்சு விளையாட்டு ஆடிக்கொண்டிருந்தாள். அந்தச் சமயத்தில் அங்கு வந்தான் ஒரு கிழவன்; மனோரஞ்சிதத்தை நோக்கி "கண்மணி" என்று புத்தமகானைப்போல அழைத்தான். அந்த கோரக்கிழவனின் குளிர்ந்த குரலைக் கேட்டு எல்லோரும் 'சட் சட்'டென்று திரும்பிப்பார்த்தனர்.

ஐயையோ!... அந்தக்கிழவனின் குரூரமான உருவத்தைக் காணச் சகிக்கவில்லையே! அம்மம்மா... பார்க்கப் பார்க்க நெஞ்சைத் தைக்குமட்டுகிறதே! வயிற்றைக்கலக்குகிறதே! அப்பப்பா!... என்ன விகாரம்... என்ன கோரம்!......


பொன்னி வெளியீடு—5

## கம்பன் கெடுத்த காவியம்

மு. அண்ணாமலை

கம்ப ராமாயணத்திலே கண்டனத்துக்குரிய பகுதிகள் எத்தனை எத்தனையோ உண்டு. அவற்றில் சில வற்றினைத் தக்க மேற்கோள்களுடன் ஆராய்ச்சி வடிவில் இப்புத்தகத்தில் தந்திருக்கிறார் ஆசிரியர். அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகவே மிகக் குறைந்த விலையில் தந்திருக்கின்றோம்.

**விலை அணா 4**

வணிகர்கட்குக் கழிவு தரப்படும். முன்பணம் அனுப்புவோர்க்கும் ரூ. 5-க்கு மேற்பட்டு வாங்குபவர்கட்கும் அனுப்பும் செலவு இலவசம். வி. பி. செலவு தனி. தனிப்பிரதி வேண்டுவோர் ஐந்தணா தபால்தலை அனுப்பவேண்டும்.

**பொன்னி லிமிடெட் — சென்னை–21.**

# சட்டம் சிரித்தது

எஸ். ஆறுமுகம்

*[கைதி ஏழுமலையின் இதய டைரியிலிருந்து பிரதிபலிக்கும் எண்ணக் குறிப்புக்கள் கதை வடிவில் தொடர்கின்றன.]*

டாண்... டாண்!

திருச்சி மத்தியசிறை மணி ஒலி இது. உள்ளத்தைத் தொட்டுக் கலக்கிப் பிறகு மூளையைக் கிறங்கவைக்கும் மாய மணி இது. தினமும் மூன்று தடவை அடித்துவிட்டு முன்னூறு முறை நெஞ்சை அதிர வைக்கும் இதற்கு 'மாயமணி' என்று தானே பெயர் சொல்ல வேண்டும். அரசாங்க விருந்தினர்களுக்குச் சாப்பாட்டுக்கு அன்பு அழைப்பு இது. விழுந்தடித்துக்கொண்டு ஓடினார்கள் சிலர். பலர் உற்சாகமற்று நடைப்பிணங்களாக நடந்து சென்றார்கள். சிறைவைக்கப்பட்டிருக்கும் கைதிகள் நடைப்பிணங்கள் தானே?

காளி வந்து என்னை உசுப்பினான். நின்றவாக்கிலே தூங்கி வழிந்த நான் கண்ணைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தேன். தூக்கத்தை அப்புறப்படுத்த அல்ல-சொட்டும் கண்ணீர் மணிகளைத் தூரவிலக்கி வைக்க! நடந்தேன் — நடந்தோம். என் பங்குச்சாப்பாடு தட்டில் வந்தது. பிசைந்தேன்; கவளங்கள் சில தோன்றின. கைப்பிடியில் தவழ்ந்த பிண்டங்கள் வாய்க்கதவை அண்டவே நடுங்கின. உணவு வேண்டவில்லை; உணவு கசந்தது. இந்நிலை இன்று, நேற்று? கடந்த ஆறுமாதங்களாக! ஆம்; கடந்த ஆறுமாதங்களாக இதே கண்ணீர் வெள்ளம் — இதே நெட்டுயிர்ப்பும் நெடுமூச்சும்!

அவர்கள் உண்டு எழுந்தனர். நான் உண்ணவில்லை.

ஆனால்......!

என் அஞ்சுகம் சிரித்த முகத்தோடு வார்க்கும் கூழ் அமிர்தமாக இனிக்குமே, அந்த நாள் என்று விடியப்போகிறது? என்றைக்கு என் உயிர்த்துடிப்பின் உணர்வைத் திரும்பப்பெறப் போகிறேன்? என்று நான் பழைய ஏழுமலையாகப் போகிறேன்? பழைய ஏழுமலை......! இன்று நான் கைதி; குற்றம் தந்த தண்டனைக்குப் பட்டம் பெற்றவன்!

ஆனால், அன்று நான் கைது செய்யப்பட ஏதுவாயிருந்த நிகழ்ச்சி சாதாரணம்தான்; என்றாலும் சட்டத்தின் திரும்பு முனை ஆயிற்றே அது!

அப்பொழுது அரிசி மண்டி ஒன்றில் வேலைக்கு இருந்தேன். அங்கு கிடைத்த முப்பது ரூபாயைக்கொண்டு நானும் மனைவியும் பிழைக்க வேண்டியவர்கள். நாட்கள் சென்றன. என் மனைவி கர்ப்பிணியாக இருந்தாள். சில்லறைச் செலவுகள் மருந்திலும் பணிவிடையிலுமாக ஆகிவிட்டன. அன்றைக்குச் சாப்பாட்டுக்கு ஏதோ கொஞ்சம் சோளக்கூழ் மட்டுமே இருந்தது. இது அஞ்சுகத்துக்கு வெறுப்பாக இருந்தது. பச்சை அரிசி கொஞ்சம் கிடைத்து ஏதாவது பலகாரம்செய்து தின்ருல் வாய்க்கு உணக்கையாகவும் ருசியாகவும் இருக்குமே என்ருள். நிறைமாதக்காரியின் ஆசையை நிறைவேற்றத்தான் ஓடியது மனதில். ஏழை நெஞ்சம் பணக்கார ஆசையைப் பற்றிநிற்கையில், அவள் ஆசை நிறைவேற வழி...!

வழி பிறந்தது. இரவு கடையை மூடப்போகும் சமயம் பார்த்து மனைவியின் நப்பாசை என்னைத் தூண்டிவிட்டது. தீவிரமாகச் சிந்தித்தேன். அஞ்சுகத்தின் ஆசை ஒன்றே என்னுள் ஆரவாரம் செய்தது. இரண்டுபடி சம்பா அரிசியைத் திருடி—அல்ல எடுத்துச் சிறிய பை ஒன்றில் கட்டிப்போட்டு வெளியில் கொண்டுவந்தேன். மனம் அடித்துக் கொண்டது: தவறுகாரணமாகவா? அரிசியைக் கடையின் பின்பக்கம் மறைத்து விட்டு, நல்லவன்போல் கடைக் காரியத்தைக் கவனித்தேன். கடையை மூடிவிட்டுப் புறப்பட்ட முதலாளியின் தலைமறையும்வரை ஒளிந்திருந்த நான், என் 'பொக்கிஷ'த்தை எடுத்துத் தோளில் வைத்தேன்; வைத்தது தான் தாமதம். அதேசமயம் முதலாளியும் எதையோ மறந்து போய்த் திரும்பவும் கடைக்குத் திரும்பிவந்தார். வழியில் என் நிலையைக் கண்முன் கண்ட அவருக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. என் செய்கை திருட்டு வடிவில் விசுவரூபம் எடுத்திருக்க வேண்டும்.

"களவாணிப் பயல்; உண்ட வீட்டுக்கு ரெண்டகம் செஞ்ச பாவி, இது மாதிரி எத்தனை தரம் அரிசியைத் திருடி வித்தியோ?"

"எசமான், என் பெண்சாதிக்கு நிறைமாசமுங்க. பலகாரம் சுட்டுத் தின்னவேணுமின்னு சொன்னுச்சு. உங்ககிட்டே சொல்லிக் கொஞ்சம் அரிசி வாங்கவேணுமின்னு தானுங்க யோசிச்சேன். ஆனு நீங்க ஏது ஞச்சும்......" என்று மென்று விழுங்கினேன் நான். உண்மை அது; ஏழை பேச்சு அம்பலம் ஏறுவதுண்டா? கண்களில் ரத்தம் தெறிக்க நின்ற என் முதலாளி, தன் சிப்பந்தி—என் வசமிருந்த அரிசியைப் பிடுங்கிக் கொண்டதுடன் திருப்திப்படவில்லை. என்னைக் கைதியாக்கி விட்டார். இப்போதாகிலும்அவர் திருப்திப்பட்டிருப்பாரல்லவா? அவர் பணக்காரர்; நான் ஏழை. அவர் எதுவும் செய்யலாம்; நான எதுவும் செய்யமுடியாது. அவருக்குச் சட்டம் தோழன்; எனக்கு...ஆம்...! எனக்கும் சட்டம் தோழன்தான். இல்லையென்றால் சட்டத்தின் தோழமைக்குத் தஞ்சம் அடைந்திருப்பேனு?

ஒருநாள்...

காலம் கரைந்தபின் எஞ்சி நிற்குமே அந்த ஒருநாள்...

அறைக்குள்—அல்ல என் சபா மண்டபத்திற்குள் என் அனுமதியின்றிக் கூட ஜெயில்வார்டர் வந்தான்.

"ஏம்பா, நீ யோகக்காரன். இனி உன்பாடு குஷிதான். உன்னை விடுதலை பண்ணியிருக்காங்க."

என் மகிழ்ச்சி குறித்து அவனுக்கு எவ்வளவு க்ரிசனை பார்த்தீர்களா?

எனக்கு மகிழ்ச்சி எல்லை கடந்தது. நான் விடுதலை பெற்றேன். ஆறுமாதம்—ஆறு யுகங்கள் அனுபவிக்க இருண்ட வாழ்வுகடந்து ஒளி நோக்கி அடியெடுத்து வைக்கவேண்டியவன் நான். சட்டம் அப்படி என்னை அனுமதித்தது. நான் பிழைத்தேன். அதிகாரி என் 'நாணய' மான தன்மைக்கு மெச்சிக் கொடுத்த வெள்ளை நாணயங்களைப் பார்த்தேன். பார்த்து விட்டுச் சிறைக்கூடத்தை ஓர் முறை ஏறிட்டுப்பார்த்தேன். மயிர்க்கூச்செறிந்தது. கைதிக் கோலம் மாறியது.

சற்றுத் தொலைவிலிருந்த என் ஊருக்கு இன்னும் ஆறு மைல் நடந்தாக வேண்டும். இருட்டி விட்டது. என்னிடம் எஞ்சியது ஒரு எட்டணு!

அஞ்சுகம் என் நினைவில் மிதந்து வந்தாள். ஒருத்தியாகத் தவிக்கவிட்டு வந்த அவள் இப்போது இரு உயிராக நின்று—அதாவது கையில் குழந்தையுடன் என்னை வரவேற்பாள்!

அஞ்சுகம்! ஆமாம்; ஆசையோடுதான் உட்கார்ந்திருப்பாள். பிள்ளையைக் கொஞ்சி விளையாடியாகிலும் என் பிரிவை மறந்திருப்பாள் சற்று. பிள்ளை—மகனே, மகளா ஏதோ பெத்துப் பிழைத்திருக்கவேணும். ஆனு அவளை வெறுங் கையோடு

தானு காணவேண்ணும்? கையிலே எட்டணுக்காசுதானே இருக்குது. வெறுங்கை முழம் போடுமா?...

'சடக்' கென்று சந்துமுனையொன்றில் நின்றேன். எதிரே நின்றது பங்களா ஒன்று. நிமிர்ந்தேன். விசித்திர எண்ணங்கள் பயங்கர ரூபமெடுத்தன.

அந்த வீட்டில்—ஊஹூம் பங்களாவில் யாருமில்லை. பங்களா காக்கும் நாய் இல்லை; 'நாய் ஜாக்கிரதை' போர்டு கூட இல்லை; நல்ல பங்களா இது! நுழைந்தேன். முன்கட்டிலிருந்த அறைக்குள் அடியெடுத்து வைத்ததும், என் பார்வையில் பட்டது ஒரு ஜோடி தங்கக் கொலுசு. பார்த்துக் கொண்டே இருக்கவில்லை.

பொறிதுவளும் போதிலே கொலுசுகளுடன் பறந்தேன்.

பலே, இந்த ஏழுமலேக்கு இனி ஒரு கவலே விட்டுது. விடிஞ்சதும் பழம், பலகாரத் தோடே போய்க்காணலாம். குழந்தை! ஆகா! அப்படியே அதை அணேச்சு முத்தமிட்டுக் கிட்டே இருப்பேன். அதுக்கு ஒரு பட்டுச் சொக்காப் தைக்கச் சொல்லி மாவுபாயிடம் கொடுப் பேன். கிலுகிலுப்பையைச் சிங்காரம் கடையிலிருந்து வாங்கி தருவேன். அது குதிச்சுச் சிரிக்கும்; நான் சிரிச்சுக்குதிச்சுப் பெருத்துப் பூடுவேன்... ஆமா... நெசமாத்தான்...

கொலுசு இரண்டையும் காசு பண்ண—அதாவது அவற்றை விற்றுப் பணம் பெறச் சேட் கடை நோக்கி நடந்தேன்.

ஆனல்..

'டக்'கென்று முதுகில் ஒரு கைப்பிடிப்பின் உணர்வை அறிந்து திரும்பினேன். 'ஜம்' மென்று போலீஸ் கான்ஸ்டபிள் ஒருவன் நின்றிருந்தான்.

"எசமான், என் மச்சானுக்கு விருந்து பண்ணுறதுக்கு வச் சிருந்ததுங்க கொலுசு இரண்டும். பணமாயிருந்தாக்கச்செலவாயிடு மேன்னு தங்கமாப் பூப்போல வச்சிருந்ததுக்குக் கேடு வந்தி ருச்சு எசமான். இந்த ஆம்பிளே யையும் சோதனே போடுங்க... கண்சிமிட்டுறதுக்குள்ளே மந் திரமா மறைஞ்சிருச்சே என் கொலுசு...ஐயோ..."

பெண் ஒருத்தி தன் துயரத் தைச் சொல்லி அழுதாள். விழித் தேன், பார்வையை விழிசுழல விட்டகணம்.

'ஆ, என் அஞ்சுகமா?'

கதறினேன்; கதறல் காட்டிக் கொடுத்த உடல் நடுக்கத்தில் கையில் சிறைவைக்கப்பட்டிருந்த கொலுசுகள் இரண்டும் தரையில் விழுந்தன.

"மச்சான், ஐயோ, நீங்கதான கடைசியிலே என் கொலுசை எடுத்தவுங்க? அந்த வீட்டிலே தான் நான் வேலேக்கிருந்தேன். உங்களுக்காகத்தானே பத்திரமா வச்சிருந்தேன் அது ரெண் டையும்?"

அஞ்சுகம் அழுதாள்.

அவள் அணேத்திருந்த அவள் பாலகன்—என் பாலகன் சிரித்

தான். 'உன் அப்பாவின் அதிசயப் புத்தியைக் கண்டு சிரித்தாயா? நீ பச்சை மண்...'

என் மகனைப் பார்த்தேன். என் உடலெங்கும் நான் என்றுமே அனுபவித்திராத தொரு இன்ப ஊறல் கிளர்ந்தெழுந்தது. பாசம்! மெய்மறந்தேன். குழந்தையைவாங்கிக்கொஞ்சி முத்தம் தர அண்டினேன்.

"ஏய் நட ஸ்டேஷனுக்கு"

கைதியாக இருந்த என் கோலம் கலைக்கப்பட்டுக்கொஞ்ச நாழிகூட ஆகவில்லையே. அதற்குள் மீண்டும் சிறைவாழ்வா? சிறை! ஐயோ...!

அஞ்சுகத்தைத் திருப்திப் படுத்த எண்ணிய நான் அந்தக் குறிக்கோள் நிமித்தமே துணிந்து திருடினேன். ஆனால் என் மனைவியின் உடமையையே திருடிவிட்டிருக்கிறேனே......! ஊரைவிட்டுப் பல மைல் தூரத்திலிருந்த அவ்வீட்டிலே கூலிவேலை செய்து பிழைத்த அவள் ஆறுமாத வரும்படி அக்கொலுசுகள் இரண்டும். விடுதலை பெற்றுவரும் இந்த ராஜாவுக்காக அவள் விருந்துபண்ணத் திட்டமிட்டிருக்கிறாள் அவள். ஆனால் சந்தர்ப்பங்கள் எவ்வித விபரீதச் சூழ்நிலையை உடந்தை கொண்டுவிட்டன?

அஞ்சுகம் அழுதாள். கண்களைத் துடைத்துக் கொண்டு போலீஸ்காரனை நோக்கினாள். அவன் கைகள் என்னை—எழுமலையைப் பற்றியிருந்தன.

"எசமான், கொலுசை எடுத்தது எம்புருசன்தான். சோதனையாட்டம் நடந்திருக்குது இது. நீங்க மேலே காரியத்தை மிஞ்ச விடாம மச்சானைப் பெரிய மனசு பண்ணி விடுதலை பண்ணுங்க. உங்க புள்ளை குட்டிங்க சேமமாயிருக்குங்க......"

தாணாக்காரன் சட்டத்தின் பிரதிநிதி, பாருங்கள்!

"ஏய் நட தாணாவுக்கு; ஊம். ஜல்தி!"

அவள் அணைத்திருந்த என் குழந்தையை முத்தமிடத் துடித்தேன், முதல் முறையாக...... ஆமாம்—முதல் முறையாக!

"எசமான், எம்மேலே கருணை காட்டி என் மகனை வாங்கி ஒரு முத்தம்மட்டும் கொடுக்க அனுமதி தாங்க. அது என் மகனுங்க. முத்தம் தந்ததும் உங்க பின்னாலே நிம்மதியோடே வந்துடுறேனுங்க..."

விம்மினேன்; அழுதேன்.

"சீ, முத்தம் வேறேயா, முத்தம்? பிள்ளை, பெண்டாட்டி என்கிற சுரணை எல்லாம் முன்னமேயே அல்லவா இருந்திருக்க வேண்டும். நேரே நட ஸ்டேஷனுக்கு......"

அவன் சட்டத்திற்கு நூலிழை தப்பக்கூடாது; அப்படித் தான் சட்டம்! ஆம்...!

ஆனா நான் கெஞ்சினது, வேண்டினதெல்லாம் என் பெற்ற பிள்ளைக்கு ஆசையா ஒரு, ஒரே ஒரு முத்தம் கொடுத்துட வேண்டுமென்கிறது தானே? இது சட்டத்தை ஒண்ணும் மீறலையே......

என்னைத் தள்ளிக் கொண்டு நடந்தது சிங்கம்; நான் கூண்டில் அடைபட்ட சிங்கமாகப் பின் தொடர்ந்தேன்.

'ஐயோ மச்சான்'

பாவம், என் அஞ்சுகம் அழுது கதறினாள். சில கணப் பொழுது சென்றபின்......

'அஞ்சுகம்'

அவள் நிமிர்ந்தாள். அவளுக்கு ஆச்சரியம் தாங்கமுடியவில்லை.

கைதுசெய்யப்பட்ட நான் மீண்டும் அவள் முன் தோன்றுவதென்றால்......

'மச்சான், ஒங்களை அந்த ஐயா மனசிரங்கி விடுவிச்சிட்டாரா? அவருக்கு ஒண்ணும் குறைவே வரப்படாது... அவரு புள்ளே குட்டிங்க சொகமா இருக்கணும்......'

என் குழந்தையை வாங்கினேன்; உச்சி மோந்தேன்; அதன் கதுப்புக்கன்னங்களிலே முத்தங்கள் ஒன்று இரண்டு, மூன்று, நான்கு கொடுத்தேன். கொடுத்துக்கொண்டிருந்தேன்; ஆஹா! இந்தப் பேரின்பத்தை இனி இதுபோல நான் என்று அனுபவிக்கப்போகிறேன்?

என் மகன் சிரித்தான்!

நான் சிரித்தேன்!

என் அஞ்சுகம் சிரித்தாள்!

'சீ, திருட்டு நாயே, என்னை அடிச்சுப் போட்டுட்டா தப்பிச்சு ஓடியாந்திட்டே? ராஸ்கல், இனி உன் ஆயுள் பூராவுமே ஜெயிலிலேதான்...நட, ஊம்...'

சட்டம் சிரித்தது!

---


மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India. Under No. CDL/688

எக்காரணத்தினாலும் எத்தனை மாதமானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவறாமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ. 8-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) ரூ. 10-8-0 (தபால் செலவு தனி)

கர்ப்பதடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்) Government Registered No. 266.

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவறாது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்பரவரியாக கருவை தடுக்கும். பில்ஸ் விலை. ரூ. 12-0-0 ஜெல்லி விலை ரூ. 6-8-0 (தபால் செலவு தனி)

Mfgrs: SEENU & CO., Post Box, 1638, ( ) MADRAS-1.

கிளை 134. SERANGOON ROAD. சிங்கப்பூர்.

சிலோன் ஏஜண்ட: NEW COLOMBO MEDICAL STORES. 82 MAIN ST. கொழும்பு-11.

# அமைதி

காலத்தைப் போக்குதற்கு வழியொன்றைத் தேடிக்
கதைச்சுவடி கையெடுத்தேன்; என் மகளோவந்து
"வேலையெலாம் முடித்துவிட்டேன்; புறப்படுங்கள் இன்னே,
வெண்டிரையின் படக்காட்சி போய்ப் பார்ப்போம்" என்றாள்;
காலத்தின் சுழற்சியிலே தாயிழந்தாள்; நொந்தாள்;
கருத்தோடு நான் வளர்த்தேன; நற்பருவம் உற்றாள்.
ஞாலத்தில் நானன்றி வேறுதுணை இல்லா
நங்கையவள்; படக்காட்சி பார்ப்பதற்குச் சென்றோம்,

தம்மனம்போல் பெண்களெலாம் தருகணவர் தேடல்
தனைவிளக்கும் நிழற்காட்சி! மனம் மருட்டும் காட்சி!
'நம்மதத்துக்கொவ்வாத இம்முறையால் நாளும்
நம்மக்கள் சீர்குலைவர்; இனறுவரை என்றும
தம்மொழுக்கம் குன்றாத என்மகளிக் காட்சி
தனைப்பார்க்கக் கூடாதே' எனஎண்ணி நொந்தேன்!
"எம்மனத்துக் குணர்வூட்டும் படம்" என்றாள்; நானோ
எம்மொழியும் கூறவில்லை; வீடுவந்து சேர்ந்தோம்;

மனையிழந்தேன் மகிழ்ச்சியெலாம் ஒருங்கிழந்தேன், பின்பு
மனையொன்றைப் பலாறியத் தேடுகின்ற வன்மை
தனையிழந்தேன் அதற்கான வயதிழந்ததாலே;
தவித்திட்டேன்; அதற்குரிய வழியொன்று கண்டேன்;
எனையிழந்த இன்பத்தை எய்துதற்குக் கள்ள
ஏந்திழையைப் பிறரறியா வகையிற்கைக் கொண்டேன்!
மனையிழந்த துயரிழந்தேன்; மகிழ்ச்சித்தேன் உண்ண
மறையிடத்தே தினந்தினமும் இரவில்போய் வந்தேன்;

வேற்றூரில் இருந்திருவர் பெண்பார்க்க என்றன்
வீடுவந்தார் அன்றொருநாள்; நல்ல பணக்காரர்;
"ஏற்றுக்கொள் கின்றாயா?" எனத் தனியிற் கேட்க
"எனக்கதிலே நாட்டமில்லை; பணந்தானா பெரிது!
வேற்றூரே வேண்டாமே!" எனச் சொன்னாள்" உன்றன்
விருப்பந்தான் யாதம்மா?" எனக் கேட்க அன்னாள்
"சாற்றுகிறேன் வையாதீர், என்னுடனே கற்ற
சங்கரனை மணத்தலிலே பெருவிருப்பம்" என்றாள்;

# கண்டேன்

"சங்கரனை மணத்தலிலே பெருவிருப்பம் என்றே
சற்றேனும் பயமின்றிக் கூறுகின்றாய்! என்முன்
இங்கினியும் நில்லாதே! என்மகள்நீ அல்ல!
இழிந்தகுலக் கீழ்ச்சாதிச் சங்கரனா வேண்டும்?
பங்கம் இதை வெளிச்சொல்லல்" என்றெல்லாம் வைது
பாய்ந்தேன்நான் புலிபோல அவள்மீது; மற்றும்
எங்குமவள் போகாமல் இருப்பதற்கு வேண்டி
இயன்றவரை பெருவிழிப்பாய் இருந்துவந்தேன் நாளும்;

காரிருளாம் கொடுங்கோலன் அரசோச்சி என்னைக்
கண்ணிருந்தும் குருடனென ஆக்கிவிட்டான்; இந்த
ஓரிரவில் நானடைந்த வேதனையை எண்ண
உளங்கூசும்; உரைப்பதற்கு நாக்கூசும் அந்தோ!
தேரோட்டிச் செல்பவன்போல் மனமோட்டிக் காதல்
திருமடந்தை காத்திருக்கும் இடநாடிச் சென்றேன்;
ஓருருவம் அவ்விடத்தே, அடர்மரத்தின் கீழே,
உளமீர்க்க அருகடைந்தேன் "கண்மணியே!" என்றேன்

"பேசாமல் பதுமையென நிற்பது ஏன்?" என்று
பிடித்திழுத்தேன் அவள்கையை; பின்புறத்தே ஒருவன்
"கூசாது பெண்ணொருத்தி குறிப்பறியா முன்னம்
கூறுகின்றாய் வீண்மொழிகள் தடிப்பயலே!" என்றே
ஓசைபடத் தலையிலொரு அடி கொடுத்தான்; நானோ
உணர்வற்றுச் சிலையானேன்; நிலைகுலைந்தேன்; பின்பு
வீசுகதிர் மின்விளக்கால் ஒளிசெய்தான்; அந்த
வியப்பளித்த உருவில் என் மகளிருக்கக் கண்டேன்!

மணிப்பொறியின் இருமுள்ளும விரைந்தோடும்; எந்தன்
மனக்கடலில் கொந்தளிப்பு, புயற்காற்று; 'இந்தத்
தணிப்பரிய இன்னலுக்கு வழியுண்டா? என்ன
தகுதியற்ற செயல் செய்தேன்?' என்றெண்ணி நொந்தேன்
அணிற்குலமாய் என்னுள்ளம் அங்குமிங்கும் தாவும்;
அழுகண்ணும் தேம்பலுமாய் அடிவீழ்ந்த மகளை
அணைத்தெடுத்தேன்; "அஞ்சாதே! அன்பேஉன் எண்ணம்
ஈடேறும்" எனச் சொன்னேன்; அகத்தமைதி கண்டேன்!



பா. முத்து

# மாறுதல்

கு. அழகிரிசாமி

நண்பர் ஒருவரைப் பார்ப்பதற்காக மயிலாப்பூருக்குப் போயிருந்தேன். வீடு திரும்ப இரவு எட்டுமணி ஆகிவிட்டது. கபாலி குளத்தின் அருகில் பஸ்ஸுக்காகக் காத்துக் கொண்டிருந்தேன். பஸ் ஸ்டாண்டில் கூட்டம் மிகவும் அதிகமாக இருந்தது. பெருங் கூட்டமாக ஆட்கள் வந்து நிற்பதன் காரணம் என்னவென்று யோசித்துக்கொண்டே இங்கும் அங்கும் உலாவிக் கொண்டிருந்தேன். கோவிலில் திருநாளும் இல்லை; மந்தைவெளி மைதானத்தில் குத்துச்சண்டைப் பந்தயம் நடைபெறவும் இல்லை. அப்புறம் எதற்காக இந்தக் கூட்டம்? எனக்குக் காரணம் தெரியவில்லை; 'என்ன காரணமோ?' என்ற என் யோசனையை அப்படியே நிறுத்திவிட்டேன். பட்டணவாசியான பிறகு ஒருவன் தன் சொந்தக் காரியத்தைத் தவிர வேறு எதைப்பற்றியும் ஒரு நிமிஷத்துக்குமேல் யோசிப்பது கிடையாதல்லவா?

மறுபடியும் இங்குமங்குமாக நடைபழக ஆரம்பித்தேன்.

நாலைந்து பிச்சைக்காரர்கள் திடீரென்று வந்து என்னை வளைத்துக் கொண்டார்கள். அவர்களில் ஒரு சிறுவன். வயது சுமார் பத்துத்தான் இருக்கும். மற்ற பிச்சைக்காரர்களைப் போல அவன் எரிச்சல்தரும் குரலில் இரையாமல், மெல்லிய குரலில் பிச்சை கேட்டான். அவன் பேசியதுகூட என் காதில் விழவில்லை. முகத்தைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. பிச்சைக்காரர்களின் நடிப்பாக இல்லாமல் உண்மையான துயரம் முகத்தில் பிரதிபலித்தது. மற்ற பிச்சைக்காரர்களைத் துரவிரட்டிவிட்டேன். அவனை மட்டும் விரட்டவில்லை. அதற்குப் பதிலாக அவனுக்குப் பிச்சை போட்டுவிடவும் இல்லை. அவன் நிற்பதையே கவனியாதவன் போல இங்கும் அங்கும் நடக்கத் தொடங்கினேன். அவன் என்னைப் பின்தொடர்ந்து வந்தான்.

"ஸார்! ஒரு ரூபாய் இருந்தால் கொடுங்களேன் ஸார்" என்றான்.

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. ஒருரூபாய் கேட்கும் அந்தப் பிச்சைக்காரனை நன்றாக ஏற இறங்கப் பார்த்தேன். அவன் தான் கேட்டதையே திரும்பவும் கேட்டான். நான் அப்பொழுதும் ஒன்றும் சொல்லாமல் மேலும் கீழும் பார்த்துக் கொண்டிருந்தேன். அழுக்காக இருந்தாலும் கிழியாத காக்கிக் கால் சட்டையும், வெள்ளைப் பனியனும் போட்டுக்கொண்டு நின்றான். தலை பரட்டையாக இருந்தது. ஆனாலும் பையன் பிறவிப் பிச்சைக்காரனாகத் தோன்ற

வில்லே. மேற்கொண்டு அவனைப் பற்றி நான் யோசிப்பதற்கு முன்பாகவே "எங்கள் அக்காளுக்கு உடம்புக்குச் சுகமில்லே ஸார். சீக்காய்ப் படுத்திருக்கிருள். மருந்து வாங்கவேண்டும். ஒரு ரூபாய் இருந்தால் தயவுசெய்து கொடுங்கள்" என்றுன்.

அவன் குரலில் துயரம் ஒலித்தது; என்ருலும் நான் அவன் பேச்சை நம்பிவிடவில்லே. பட்டணத்திலே இம்மாதிரிப் பிச்சை யெடுக்கும் பையன்கள் அதிகம். பள்ளிக்கூடச் சம்பளத்துக்கு என்றும் தொலேந்துபோன புத்தகத்தை வாங்குவதற்கென்றும், ரூபாய்க் கணக்கில் பிச்சைகேட்டு வாங்கி 'கோல்டுபிளாக்' சிகரெட்டும், பன்னிரண்டணுச் சினிமாடிக்கட்டும் வாங்குகிற பையன்கள் பலர். அந்தக் கூட்டத்தில் இவனேயும் ஒருவனுகக் கருதி, "போடா அந்தப்பக்கம், திருட்டுப் பயல்! அக்காளுக்காவது உடம்புக்குச் சுகமில்லேயாவது!" என்று சீறிஞேன். அவன் அப்பால் போகாமல் என்னே நெருங்கிவந்து, "உண்மையாகத்தான் ஸார், அக்காளுக்கு ஜுரம்; படுத்த படுக்கையாக இருக்கிருள். நீங்கள் வேண்டுமானுல் வந்து பாருங்கள். வீடு பக்கத்தில் தான் இருக்கிறது" என்றுன்.

"போடா என்றுல் போகமாட்டாய் போலிருக்கிறதே, அதிகப் பிரசங்கி" என்று சொல்லிவிட்டு இரண்டடி தள்ளி நின்றேன். பையன் என்னே விடவில்லே. அவனும் இரண்டடி நகர்ந்துவந்து, "ஸார் எங்கள் வீட்டுக்கு வாருங்கள். அம்மா அழைத்துவரச் சொன்னுள்" என்றுன்.

எனக்கு ஒரே திகைப்பாக இருந்தது. பையன் முதலில் சொன்னதற்கும், இரண்டாவதாகச்சொன்னதற்கும் யாதொரு சம்பந்தமும் இல்லாமல் இருக்கவே, "அம்மா அழைத்தாளா?" என்று கேட்டேன்.

"ஆமாம் ஸார். அம்மா உங்களே அழைத்துவரச் சொன்னுள்."

அவன் பேசியது பெரிய அதிசயமாக இருந்தது. 'என்னே அவனுடைய அம்மா அழைத்தாளா? எப்படி அழைத்திருக்க முடியும்? நான் யார்? அவர்கள் யார்?......' இந்த விதமாக எண்ணிக் கொண்டு பஸ் வர வேண்டிய திசையை ஏறிட்டுப் பார்த்தேன். திசைதான் தெரிந்ததே ஒழியப் பஸ் தட்டுப்படவில்லே. அதற்குப் பதிலாக அந்தப் பஸ்ஸுக்காக மேலும் மேலும் ஆட்கள் வந்து கூடிக் கொண்டிருந்தார்கள். இனி பஸ் வந்தாலும், அதில் இடம் பிடிப்பது கஷ்டம் என்று எனக்குத் தெளிவாகிவிட்டது. சுமார் இரண்டு பஸ்கள் வந்துபோன பிறகுதான் — அதாவது மணி ஒன்பதுக்குத்தான் பஸ் ஏற முடியும் என்று தீர்மானம் பண்ணிக்கொண்டு பையனேப் பார்த்துத் திரும்பினேன். "டேய், பொய் சொல்லாதே! இப்போது உன்னேடு உங்கள் வீட்டுக்கு வரப்போகிறேன். நீ சொன்னது பொய்யென்றுல் உன் அப்பாவிடமும் சொல்லி

உதை வாங்கிக் கொடுப்பேன். நானே உன்னை இந்தப் பக்கத்தில் பார்த்தால் போலீஸ்காரனிடம் பிடித்துக் கொடுத்து விடுவேன்'' என்று பயமுறுத்தினேன்.

“உண்மையைத்தான் சொல்கிறேன் ஸார். நீங்கள் எங்கள் வீட்டுக்கு வாருங்கள்'' என்று பையன் சற்றேனும் பயப்படாமல் சொன்னான்.

பஸ் கிடைக்க ஒரு மணி நேரமாவது ஆகும். அதுவரையிலும் இந்தப பையனின் ‘ஏமாற்று வித்தை'யைக் கண்டு பிடிப்பதில்.பொழுதைப் போக்கலாமே என்று எனக்குத் தோன்றியது. ஆம். முன்பின் காரணமின்றி இந்த எண்ணம் எனக்கு எப்படியோ உதித்து விட்டது.

“வாடா போவோம்'' என்றேன்.

அவன் எனக்குப் பின்னால் நடந்து வந்தான்.

“உங்கப்பாவுக்கு என்னடா வேலை?''

“எனக்கு அப்பா கிடையாது ஸார். செத்துப்போய்விட்டார்.''

“அம்மா என்னவேலை செய்கிறாள்?''

“அம்மா இப்பொழுது வேலையில்லாமல் சும்மாதான் இருக்கிறாள் ஸார்.''

பேசிக்கொண்டே வரும் போது, வெற்றிலை பாக்குக் கடை ஒன்று எதிர்ப்பட்டது. அங்கே விலகி வெற்றிலைபாக்கும், அப்பொழுதுதான் வெளிவந்த ஒரு ஆங்கில தினசரிப் பத்திரிகையும் வாங்கிக்கொண்டு மேற்கொண்டு நடக்கலானேன்.

விளக்கு வெளிச்சமும், ஆள் கூட்டமும் நிறைந்த பெரிய தெருவைவிட்டு, ஒரு சிறு தெருவுக்குள் என்னை அழைத்துச் சென்றான் பையன். அப்புறம் சிறு தெருவிலிருந்து ஒரு சந்து வழியாக நடந்தான்; நான் பின் தொடர்ந்துசென்றேன். சந்தைக் கடந்ததும் மற்றொரு தெரு. அந்தத் தெருவில் வெகுதூரம் போய்விட்டோம். எனக்குத் தயக்கம் உண்டாகிவிட்டது.

ஒரு சிறுவனைப் பின் தொடர்ந்து இரவு வேளையில் பர்லாங் கணக்கில் நடந்து செல்லுவது வேலை ‘மெனக்கெட்ட' வேலையாகத் தோன்றியது.

“இன்னும் எவ்வளவு தூரம் போக வேண்டுமடா?'' என்று பொறுமையிழந்து பையனைப் பார்த்துக் கேட்டான்.

“வந்தாய் விட்டது ஸார். பக்கம் தான்'' என்றான் சிறுவன்.

தெருவைக் கடந்து, மற்றொரு சந்தில் நுழைந்தோம். எனக்குப் பயமே உண்டாகி விட்டது. சந்தின் முடிவு மயிலாப்பூரின் எல்லை மாதிரி இருந்தது. அதற்கப்பால் வீடுகள் இல்லை. புல் முளைத்த வெறும் வெளிதான். பையனின் வீடு, சந்தின் கோடியில் புல் வெளியைப் பார்த்துக் கொண்டிருந்தது. அந்த வீட்டைப் பார்க்கவே எனக்குப் பயமாக இருந்தது. காரைக் கட்டிடமாக இல்லாவிட்டால் அதைக் குடிசை என்றுதான் சொல்லமுடியும்.

அவ்வளவு சிறியது. வீட்டைச் சுற்றிலும் வெட்டவெளியும், குட்டிச் சுவர்களுமாக இருந்தன. வீட்டினுள் ஒரு சிறு சுவரொட்டி விளக்கு மினுக்கு மினுக்கு என்று எரிந்து கொண்டிருந்தது. வீட்டு வாசலில் சிறிதும் பெரிதுமாக இரண்டு திண்ணைகள் பெரிய திண்ணையை மறைத்துக்கொண்டு ஒரு கந்தல் படுதா தொங்கியது.

நான் வாயிலில் நின்றேன். பையன் வீட்டுக்குள்ளே சென்றான்.

'இந்த வீட்டிலிருந்து நாலு முரடர்கள் வந்து அடித்துப் பிடுங்கினாலும் கேள்வியில்லையே!' என்ற அச்சத்துடன் நான் நின்றுகொண்டிருந்தேன்.

பையன் தன் தாயாரை அழைத்துக்கொண்டு வெளியே வந்தான். அந்த அம்மாள் "வாருங்கள் வாருங்கள்" என்று உபசரித்துக் கூப்பிட்டாள். உள்ளே சென்றேன். பக்கத்திலிருந்த பெரிய திண்ணையில் ஒரு கிழிந்த பாயைக் கொண்டு வந்து போட்டான் சிறுவன். அதில் உட்கார்ந்துகொண்டேன்.



உள்ளே இருந்த சுவரொட்டி விளக்கை வெளியே கொண்டுவந்து மற்றொரு திண்ணையில் வைத்தாள் ஒரு இளம் பெண். அவள்தான் அவனுடைய அக்காளாக இருக்க

வேண்டுமென்று ஊகித்துக் கொண்டேன். ஆனால் அவன் சொன்னபடி அவள் நோய் வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையாக இல்லை. ஒருவேளை வேறொரு பெண் உள்ளே படுத்திருக்கலாம் என்று நினைத்துக் கொண்டேன். இல்லையென்றால் பையன் பொய் சொல்லியிருக்க வேண்டும். பையனுடைய பேச்சில் எவ்வளவு உண்மை இருந்ததென்று தெரிந்துகொள்ள "அக்காளுக்கு உடம்புக்குச் சுகமில்லை" என்று சொன்னான் பையன். ஒரு ரூபாய் வேண்டுமென்றும் கேட்டான். அவன் பேச்சில் நம்பிக்கை ஏற்படவில்லை......" என்று நான் சொல்லிக்கொண்டிருக்கும் போதே, அந்த அம்மாள் குறுக்கிட்டுப் பையனைப் பார்த்து,

"அப்படியெல்லாம் ஏண்டா சொன்னாய்? சும்மா கூப்பிட்டால் ராஜா நம் வீட்டுக்கு வரமாட்டாரா?" என்று புன்னகை செய்துகொண்டே சொன்னாள். அவளுடைய புன்னகையிலும் பேச்சிலும் பொய்யும் பாவனையும் நிறைந்திருந்ததைக் கண்டு பிடித்துவிட்டேன்.

"நீங்கள் சொல்லுவது எனக்கு விளங்கவில்லை. சும்மா கூப்பிட்டால் மூன்றாவது ஆள் உங்கள் வீட்டுக்கு வந்துவிடுவானா?" என்று சற்றுக் கோபத்துடன் கேட்டேன்.

"கோபப்படாதீர்கள். எங்கள் வீட்டுக்கு வந்து சந்தோஷமாகத் திரும்பாமல், கோபத்துடன் திருப்புவதா?" என்று சிரித்துக் கொண்டே சொல்லிவிட்டு, அந்த இளம் பெண்ணைப் பார்த்து, "ஏண்டி, பிடை பிடித்தவள் மாதிரி நிற்கிறாய்? முகத்தைக் கழுவிப் பவுடர் போட்டுக் கொண்டு வாயேண்டி" என்று அதட்டினாள்.

எனக்கு விஷயமெல்லாம் புரிந்துவிட்டது. 'சட்'டென்று எழுந்தேன். "சீ, மானங்கெட்ட ஜென்மங்களா! உங்கள் வீட்டுக்கு வந்த என் புத்தியைச் செருப்பால்தான் அடித்துக் கொள்ளவேண்டும். எதற்காக இந்த ஈனப் பிழைப்புப் பிழைக்க வேண்டும்? உடம்பிலேதான் பலம் இருக்கிறதே, ஏதாவது வேலைசெய்து பிழைத்தால் என்ன?" என்று வாய்க்கு வந்தபடியெல்லாம் சொல்லிவிட்டுப் புறப்பட்டேன்.

என் பேச்சைக் கேட்டுப் பையன் பயந்துவிட்டான். வீட்டுக்குள்ளே போன பெண் என்னைத் திரும்பிப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

அடியெடுத்து வைத்து வெளியே நடந்துவந்த என்னை வழிபார்த்து அந்த அம்மாள் சொன்னாள்: "ஐயா, சாமி வந்துவிட்டுப் பேசாமல் போகிறீர்களே? நீங்கள் கோபப்பட்டால் எங்கள் பிழைப்பு என்ன ஆவது? காலையிலிருந்து நாங்கள் ஒருவரும் சாப்பிடவில்லை. வந்ததற்கு ஏதாவது கொடுத்துவிட்டுப் போங்கள்."

இவ்வாறு சொன்னதுடன் கைபெடுத்துக்கும்பிட்டாள். அவளுடைய பேச்சு புத்தகங்களில்

படித்த தாசிவீட்டுத் தாய்க்கிழவி பேச்சுமாதிரி இல்லை; பிச்சைக் காரியின் ஓலம்போலவே இருந்தது.

நான் ஒரு கணம் நின்றேன். இது அவளுக்கு ஒரு மகத்தான நம்பிக்கையை ஊட்டிவிட்டது.

"ராஜா! வாருங்கள் வந்து உட்காருங்கள். சாப்பாட்டுக்கு ஏதாவது கொடுத்துவிட்டுப் போங்கள். உங்கள் குழந்தை குட்டிகள் நன்றாயிருக்கும்" என்று கெஞ்சினாள்.

அவளைக்கண்டு உண்மையிலேயே என் மனம் இளகிவிட்டது. என் கோபத்தைக்கூட மறந்துவிட்டேன். 'இவள் சாப்பாட்டுக்கு என்று கேட்பது சாப்பாட்டுக்காகத்தான் இருக்க முடியும். வேறு என்ன செலவு செய்யப் போகிறாள்?' என்று நினைத்துக்கொண்டு, திரும்பவும் திண்ணையில் போய் உட்கார்ந்தேன்.

இளம் பெண் மிரண்ட பார்வையோடு வெளியே வந்தாள். அவளைப் பார்த்ததும் எனக்கு ஒருவிதமான சிரிப்புக்கூட வந்தது. 'இந்தப் பெண்ணை விரும்பிப் பணம் கொடுக்க வருகிறவனும் இருக்கிறானா?' என்று நினைத்தேன்.

அவள் பொதுநிறமானாலும், வேசிக்குரிய அழகோ அலங்காரமோ இல்லமால் இருந்தாள். தலையில் எண்ணெய் மெருகு இல்லை. முகத்தில் பொய்ச் சிரிப்புக் கூடத் தவழாத இருள் சாயை. கட்டியிருந்த புடவையோ ஒரே கந்தல். அலைந்து உலரப்போட முடியாத கந்தல். துணியின் அழுக்கும் நாற்றமும் இம்மட்டு அம்மட்டு என்றில்லை. நிமிஷத்துக் கொரு தடவை தலையைச் சொறிந்து கொண்டும் இருந்தாள்.

வயது பதினாறு பதினேழு தான் இருக்கும். குடியானவப் பெண்போன்று கட்டுறுதியுள்ள சரீரம். ஆனால் வறுமையின் காரணமாகச் சிறிதும் வாட்டம் கண்டிருந்தது. அவளையும், அவளுடைய கோலத்தையும், மற்றும் உள்ள பல துணைக் காரணங்களையும் கொண்டு பார்த்தால், இந்த மாதிரியான வாழ்க்கையை அவர்கள் சமீபத்தில் தான் தொடங்கியிருக்க வேண்டுமென்று தோன்றியது. குறைந்த பட்சம் மூன்று மாத காலமாவது இந்த விதமான வாழ்க்கையை நடத்தியிருந்தால் கூட அவளுடை குடும்பம் இவ்வளவு கோரமான வறுமையில் தத்தளித்திருக்காது. வயிறாரச் சாப்பாடு கிடைத்திருக்கும். காதிலும் மூக்கிலும் பித்தளை நகைகளும், கட்டிக்கொள்ள ஒரு போலிப் பட்டும், முகத்திலே அசட்டுத்தனமான சிரிப்புமாவது காணப்பட்டிருக்கும். இங்கே அந்தவித அடையாளங்கள் எவையும் இல்லை.

"உங்களுக்கு எந்த ஊர்?" என்று கேட்டேன்.

"தஞ்சாவூர்" என்றாள் பெரியம்மாள்.

"தஞ்சாவூரில் எந்தத் தெரு?"

"தஞ்சாவூர் டவுன் அல்ல. தஞ்சாவூர் ஜில்லாவில் ஒரு கிராமம்."

"ஓஹோ!"

மேற்கொண்டு அவளிடம் என்ன கேட்பது? கேட்டு எனக்கு ஆகவேண்டியது ஒன்றுமில்லை. அவளுக்கு ஆகவேண்டியதும் ஒன்றுமில்லை. சிறிது நேரம் ஒன்றும் பேசாமல் உட்கார்ந்திருந்தேன். அப்புறம் திடீரென்று துள்ளி எழுந்து, "அப்படியானால் நீங்கள் இன்று காலையிலிருந்து ஒன்றுமே சாப்பிடவில்லையா?" என்று கேட்டேன்.

பெரியம்மாள் அழுதுவிட்டாள். இரண்டொரு நிமிஷங்கள் அவள் எதுவுமே பேசாமல் அழுதாள். அவளுடைய துயரத்தை என்னால் பொறுக்க முடியவில்லை. 'ஏனடா இந்த இடத்துக்கு வந்தோம்?' என்று வருந்தினேன்.

"பச்சைத் தண்ணீர் பல்லில் படவில்லை, ஐயா. இந்தப் பையன் தான் காலையில் கொஞ்சம் பழைய சாதம் சாப்பிட்டான். நானும் அவளும் பட்டினியாகத் தான் கிடக்கிறோம்" என்று ஏக்கமும் பெருமூச்சுமாகச் சொன்னாள்.

ஒரு ரூபாய் எடுத்துக் கொடுக்கலாம் என்று சட்டைப் பையில் கையை விட்டேன். ஆனால் அங்கே ஒரு ரூபாயாக இல்லை; ஒரே ஒரு இரண்டு ரூபாய் நோட்டும், சுமார் ஆறணாச் சில்லறையும் இருந்தன. பேசாமல் இரண்டு ரூபாயை எடுத்துக் கொடுத்தேன். அதை வாங்கிக் கண்ணில் ஒற்றிக்கொண்டாள் பெரியம்மாள். "நீங்கள் மகராசனா யிருக்கவேண்டும்" என்று என்னை வாழ்த்திவிட்டு, மறுகணமே தன் பையனை அழைத்து, பக்கத்துத் தெருவிலுள்ள ஒரு வீட்டில்போய் ஒன்றரை ரூபாய்க்கு அரிசி வாங்கிக்கொண்டு வரும்படி சொல்லியனுப்பினாள். பையன் புறப்பட்டுப் போய்விட்டான்.

அதற்குமேல்தான் சாதம் சமைத்துச் சாப்பிடவேண்டும். காய்கறிகள் எவையேனும் உண்டா இல்லையா என்று எனக்குத் தெரியவில்லை. பெரியம்மாள் சமையலுக்கு ஆயத்தம் செய்ய உள்ளே போனாள். மகளை அழைத்து அவளோடு ஏதோ ரகசியமாகச் சிறிது நேரம் பேசினாள். அதற்குப் பிறகு மகள் தனியாக வெளியே வந்தாள். நான் உட்கார்ந்திருக்கும் திண்ணையில் அழுக்குப் படிந்து எண்ணெய்ச்சிக்கு நாறும் தலையணைகளைக் கொண்டுவந்து போட்டுவிட்டு உள்ளே போனாள்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை. இதற்குள் என்னைப்பற்றித் தெரிந்துகொண்டிருப்பார்கள் என்று நம்பினேன். ஆனால், அவர்களுடைய நடவடிக்கைகள் வேறுவிதமாக இருந்தன. நான் உடனே அங்கிருந்து கிளம்பிவிட வேண்டும் என்று எழுந்து, ஒன்றும் தெரியாதவனைபோல, "நேரமாகிவிட்டது. நான்..." என்று சொல்லிக் கொண்டிருக்கும் போது,

"இதோ வந்துவிட்டேன். போகலாம், இருங்கள்" என்று சொன்னாள் மகள்.

இதற்குள் சிறுவன் அரிசி வாங்கிக்கொண்டு வந்துவிட்டான். அரிசியோடு வீட்டுக்குள்ளே போனவனிடம் ஏதோ ரகசியமாகச் சொன்னாள் தாயார். அப்புறம் அவன் வெளியே வரவில்லை. உள்ளேயே உட்கார்ந்து விட்டான்.

மகள் வெளியே வந்தாள். விளக்கு வெளிச்சத்தில் அவள் முகத்தை நன்றாகக் கூர்ந்து பார்த்தேன். முகத்தில் பேயறைந்தது போல ரத்தமெல்லாம் வற்றி வெளுத்துப்போயிருந்தது. உதடுகள் நடுங்கின. தயங்கித் தயங்கி அடியெடுத்துவைத்து நடந்து வந்தாள். என் அருகே கிடக்கும் தலையணைகளை எடுத்து மாற்றிப் போட்டுவிட்டு, என் அருகில் வந்து கூசிக்கூசி உட்கார்ந்தாள். அதே சமயத்தில் உள்ளேயிருந்த பெரியம்மாள் வீட்டுக் கதவை அடைத்துவிட்டாள். மகளும் நானும் இருட்டில் தனியாக இருந்தோம்.

எனக்கு ஏககாலத்தில் கோபமும் துக்கமும் பிறந்தன.

"என்ன விஷயம்?" என்று, கூர்மையான குரலில் 'பளிச்' சென்று கேட்டேன்.

"நேரமாய்விட்டது. நான் போய்..."

"நீ போய்...?"

"சமையல் செய்யவேண்டும். எல்லோரும் பசியோடிருக்கிறோம்"

"சரி!"

"உங்களை வழியனுப்பி விட்டால் நான் வேலையைக் கவனிக்கலாம்......"

இதற்குமேல் அவளால் பேச முடியவில்லை.

"சீக்கிரம்........" என்று கெஞ்சும் குரலில் தடுமாறிக் கொண்டே சொன்னாள்.

அப்புறம் என் அருகிலேயே பாயில் படுத்து விட்டாள்.

அவள் நிலைமைக்கு நான் இரங்குவதா? அழுவதா? கோபிப்பதா?

என்னால் பேசவே முடியவில்லை.

அவளுடைய வறுமையைப் பார்த்து என் நெஞ்சம் ரத்தத்தைச் சிந்திக் கொண்டிருந்தது. அவ்வளவு நேரமும் அந்த வீட்டில் நான் உட்காந்திருந்தற்குக் காரணம் அவர்கள் மீது எனக்கு ஏற்பட்ட இரக்கமும், அவர்கள் துன்பத்தைக் கண்டு நான் பட்ட துன்பமுந்தான். ஆனால், அந்த இளம் பெண் நான் உட்கார்ந்துகொண்டிருப்பதற்கும், பணம் கொடுப்பதற்கும் வேறுவிதமாகப் பொருள் கற்பித்துவிட்டாள். இரவில் வீடு தேடி வந்து உதவியனுக்கு, தன் 'கடமை'யைச் செய்யப் பக்தி சிரத்தையோடு வந்து காத்திருக்கத் தொடங்கி விட்டாள்.

நான் எழுந்து நின்றேன். திரும்பவும் அவள் அருகில் உட்கார்ந்தேன். என் துயர உணர்ச்சிகளை என்னால் அடக்க முடியவில்லை. அழுகையும் வந்தது. விளங்குகின்ற குரலில் 'அம்மா!' என்று அந்தரங்கமாக அவளை அழைத்தேன். 'அம்மா!' என்ற சொற்பிரயோகத்தைக் கேட்டதும், திடுக்கிட்டு எழுந்து என் முகத்தைப் பார்த்தாள்; என் கண்ணீரையும் பார்த்தாள். ஒன்றும் சொல்லாமல் குப்புறப்படுத்து அழ ஆரம்பித்துவிட்டாள். ஆனால் அழு குரல் கேட்கவில்லை; விம்மல் தான் கேட்டது. அவள் உடம்பு விம்மலின்போது எழும்பித் தாழ்ந்தது தெரிந்தது.

அவள் முதுகில் கையை வைத்துக்கொண்டே, "அம்மா! நீ வீட்டிற்குள்ளே எழுந்துபோ" என்று சொல்ல ஆரம்பித்து வாக்கியத்தை முடிக்க முடியாமல் குழறிவிட்டேன்.

அவள் எழுந்து போகாமல், அப்படியே படுத்துக்கொண்டு



அழுதாள். இரண்டாவது தடவை நான் முதுகைத் தொட்டதும், புரண்டு படுத்தாள். என் கையை இறுகப் பற்றிக்கொண்டு 'ஓ' வென்று அலறிவிட்டாள்.

இந்தத் துயரநாடகத்தின் மூலமும் நடுவும் அறியாத பெரியம்மாளும், சிறுவனும் பயந்து போய்க் கதவைத் திறந்து கொண்டு வெளியே ஓடி வந்தார்கள். இருவருடைய கண்ணீரும் அவர்களுக்குப் புரிந்துகொள்ள முடியாத பயத்தை அளித்தது.

வந்தவனும், வரவேற்றவளும் ஒருமிக்க துயரத்தோடு அழும் காட்சியை எந்த விபசார விடுதியில்தான் பார்த்திருக்க முடியும்?

"அம்மா நான் வருகிறேன்!" என்று சொல்லிவிட்டு, அவர்களுடைய பதிலை எதிர்பார்க்காமல் விறுவிறு என்று நடந்து பஸ் ஸ்டாண்டை நோக்கி வந்துவிட்டேன். நல்ல வேளையாகப் பஸ்ஸும் தயாராக நின்றது. ஏறி உட்கார்ந்து கொண்டதும் எங்கோ ஒரு கடிகாரம் ஒரு மணி அடித்தது. பஸ்ஸும் புறப்பட்டு விட்டது

அப்போது மணி ஒன்பதரை.

முகத்தில் வழக்கம்போலச் சிரிப்பும், மலர்ச்சியும் இன்றி நான் வீட்டில் நுழைந்ததை என் குழந்தைகள் பார்க்கவில்லை; அவர்கள் தூங்கிவிட்டார்கள். என் மனைவிதான் பார்த்தாள். ஆனால், 'என்ன, ஏது?' என்று அவள் உடனே கேட்டுவிடவில்லை.

"ஏது இவ்வளவு நேரம்?" என்றுமட்டும் கேட்டாள்.

"நேரமாய்விட்டது. நீ சாப்பிட்டாயோ?"

"குழந்தைகள் தான் சாப்பிட்டுவிட்டுத் தூங்குகிறார்கள்" என்றாள் மனைவி.

"நீயும் சாப்பிட்டிருக்க வேண்டியதுதானே? வா, சாப்பிடலாம்" என்று சொன்னேன்.

என் விருப்பத்திற்கிணங்க, அவள் ஏககாலத்தில் இரண்டு கலங்களில் பரிமாறி, மோரையும், சாதத்தையும் பக்கத்தில் கொண்டுவந்து வைத்துவிட்டு, என்னோடு சாப்பிட உட்கார்ந்தாள்.

அப்புறம்தான், "இன்று ஏன் ஒரு மாதிரி இருக்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

"உன்னைவிட்டு வெகு நேரமாக வெளியில் இருந்துவிட்டேன் அல்லவா?" என்று என் நிலையை மறைப்பதற்காகச் சொன்னேன்.

அவள் சிரித்தாள்.

'அந்தப் பெண் இப்போது சாப்பிட உட்கார்ந்திருப்பாளா, இல்லை இன்னும் தன் துயரத்தை அடக்க முடியாமல் அழுது கொண்டிருப்பாளா?' என்று யோசித்துக்கொண்டே, சாப்பிட்டு எழுந்தேன்.

[அடுத்த இதழில் முடியும்]

# சிறந்த புதிய வெளியீடுகள்

★

| | | |
|---|---|---|
| நினைவுச் சின்னம் | இளமைப்பித்தன் | 1—0—0 |
| கடல் முத்து | எஸ். ஆறுமுகம் | 1—0—0 |
| அமிர்தம் | ,, | 1—0—0 |
| உலக அரங்கில் | டி. கே. சீனிவாசன் | 1—0—0 |
| தபாலாபீஸ் விநோதங்கள் | க. சண்முகசுந்தரம் | 0—8—0 |
| இலக்கியச் சந்தையில் | மு. அண்ணாமலை | 0—8—0 |
| கம்பன் கெடுத்த காவியம் | ,, | 0—4—0 |
| தாஜ் மஹால் | நா. பாண்டுரங்கன் | 0—8—0 |
| வீடும் விளக்கும் | சுகி | 0—8—0 |
| கொடி முல்லை | வாணிதாசன் | 0–12—0 |
| மதம் அவசியமா? | (பதினொரு ஆசிரியர்கள்) | 0–12—0 |
| வருங்காலத் தமிழகம் | கா. அப்பாத்துரை | 0–12—0 |
| சங்க இலக்கிய மாண்பு | ,, | 0—6—0 |
| இந்திய மொழிச்சிக்கல் | ,, | 2—8—0 |
| ஏழையின் அரசியல் | எஸ். சதாசிவம் | 0—8—0 |
| கார்ல் மார்க்ஸ் | ,, | 0–12—0 |
| இதயக் குமுறல் | ,, | 1—8—0 |
| எகிப்து நாட்டு எழிலரசி | நிலவழகன் | 1—0—0 |
| இரத்த வெள்ளம் | ,, | 0–10—0 |
| ஏமாறாதே | ,, | 0—6—0 |
| இரணகளம் | தமிழன்பன் | 0—8—0 |

விவரங்கட்கு :

**பொன்னி லிமிடெட்,**

16, சேணியம்மன் கோயில் தெரு,

தண்டையார்ப்பேட்டை — சென்னை-21

# வெறும் கலாட்டா!

## 375 மந்திரிகள்

"பகைவனுக் கருள்வாய்—நன்னெஞ்சே
பகைவனுக் கருள்வாய்"

பாரதியார் இப்படிப் பாடி வைத்திருக்கிறார் என்பது நம் சென்னை மாகாணத்தில் பலருக்கு இப்போதுதான் தெரிய வந்திருக்கிறது. அவர்களில் சிலர் இந்த 'உபதேசத்தை' ஒரு எழுத்துக்கூடத் தவறாமல் பின்பற்றவும் முனைந்திருக்கிறார்கள். 'அந்த பாரதி பக்தர்கள் யார்? அவர்கள் எங்கே முளைத்திருக்கிறார்கள்?' என்று உங்கள் ஆர்வம் கேள்விகளை எழுப்புவது நன்கு புரிகிறது.

தேர்தல் நடந்து முடிந்திருக்கிறதல்லவா, நம் சென்னை ராஜயத்தில்! அதன் பயனாக 375 'புது மனிதர்கள்' முளைத்திருக்கிறார்கள். அவர்கள் வரப்போகும் ஐந்து ஆண்டுகளுக்கு ஆக்கவும் வல்லவர்கள், அழிக்கவும் வல்லவர்கள்!

இந்த 375 பேர்வழிகளில் 223 நபர்கள் 'காங்கிரஸை ஒழித்துக் கட்டுவதாக'ச் சபதம் கூறி ஓட்டுப்பெற்றவர்கள். அவர்களில் சிலர்தாம் மேற்கூறியபடி 'பாரதி பக்தர்களாக' மாறியிருக்கிறார்கள்! தேர்தல் சமயத்தில் ஓட்டுப் பெறுவதற்காகக் காங்கிரஸ்காரர்களைப் பற்றி 'உள்ளதையும் இல்லாததை'யும் கூறிய அவர்கள், "காங்கிரஸ்காரர்களே, போதும் உங்களுக்கு நாங்கள் தந்த தண்டனை—மந்திரிசபை வைக்கிறீர்களா? எங்கள் ஒத்துழைப்பு உங்களுக்கு முக்காலும் உண்டு" என்று இப்போது திருவாய் மலர்ந்திருக்கிறார்கள். இந்த 'மேலான' குணத்தைத்தான் 'பகைவனு'க்கு அருளும் நல்ல இயல்பு என்று நாம் குறிப்பிடுகிறோம்.

வேறு சிலர் "யார் பகைவர்? யார் நண்பர்? அனைவரும் சமமே இந்த வையகத்தில்" என்ற வேதாந்தப் போக்கில், 'அவர்கள் அயோக்கியர்கள் என்றால் இவர்கள் படுமோசக்காரர்கள்' என்று தத்துவம் பேசி 'நடுநிலைமை' வகிக்கிறார்கள்.

மற்றும் சிலர் மந்திரிசபைக் கட்சியில் இருப்பதைவிட 'எதிர்க்கட்சி'யாக இருப்பது நல்லது என்று வாதம் புரியத் தொடங்கியிருக்கிறார்கள். ஆட்சிக்கு வந்தால் செல்வாக்குப் போய்விடும் என்பது இவர்கள் கூறும் காரணம்.

ஒருகதை நினைவுக்கு வருகிறது. ஒரு ராஜா. அவருக்கு ஒரு மந்திரி. ராஜாவின் தனி அறையில் ஒரு குருவி கூடு கட்டி

197508

ட்டது. அந்தக் குருவியின் 'பிரஜா உரிமை'யை ராஜா எப்படித் தடுக்கமுடியும்? கூடு கட்டியதோடு அந்தக் குருவி நிற்கவில்லை. "ராஜா, ஏ, ராஜா எனக்கு ஒரு காலணாக் கொடு" "எனக்கு ஒரு காலணாக்கொடு" என்று கேட்டுக்கொண்டேயிருந்தது. ராஜா சில நாட்கள் இந்தக் கூச்சலைப் பொருட்படுத்தவில்லை. குருவி விடவில்லை. "ராஜாவிடம் காசு இல்லை—ராஜாவிடம் காசு இல்லை" என்று சத்தம்போட ஆரம்பித்தது. உபத்திரவம் பொறுக்காமல் ராஜா மந்திரியைக் கூப்பிட்டுக் குருவிக்குக் காலணாவை எடுத்துப் போடும்படி கட்டளையிட்டார். காலணாக் கிடைத்தவுடன் குருவி சும்மாயிருந்ததா? அதுதான் இல்லை. "ராஜா எனக்குப் பயந்துபோய்க் காசு கொடுத்தார்" "எனக்குப் பயந்துபோய்க் காசு கொடுத்தார்" என்று சத்தம் போடத்தொடங்கியது. பொறுத்துப் பொறுத்துப் பார்த்த ராஜாவால் இந்தத் தொல்லையைத் தாங்கமுடியவில்லை. மந்திரியை அழைத்துக் குருவிக்குகொடுத்த காசைத் திரும்ப வாங்கிவிடும்படி கூறினார். மந்திரி காசை வாங்கிவிட்டார். குருவி இப்பொழுது என்ன செய்தது தெரியுமா? "ராஜாவிடம் காசு இல்லை. என் காசை வாங்கிக் கொண்டார்"—"ராஜாவிடம் காசு இல்லை. என் காசை வாங்கிக் கொண்டார்" என்று கூச்சலிட்டது. ராஜாவுக்கும் மந்திரிக்கும் போதும்போதுமென்றாகி விட்டது. இந்தக் குருவியைத் திருப்திப்படுத்த ராஜா என்ன செய்ய முடியும்? மந்திரிதான் என்னசெய்ய முடியும்? இதுதான் கதை.

இந்தக் கதையில் வரும் குருவி மாதிரி வாழ்நாளெல்லாம் 'ஆக்ட்' பண்ணலாம் என்று நினைக்கிறார்கள், சட்டமன்றம் வந்துள்ள சிலர்.

சென்னை ராஜ்யத்தில் தேர்தல் முடிவுகளுள்ள நிலையில் 'எதிர்க்கட்சி எது?' என்பதே யாருக்கும் சீக்கிரத்தில் விளங்கப் போவதில்லை. இன்று 'எதிர்க்கட்சி' யாக இருப்பது நாளை 'ஆட்சி பீடம்' ஏறலாம்; 'ஆட்சி செலுத்தும் கட்சி' சந்தர்ப்பவசத்தால் எதிர்க்கட்சியாகும் துர்ப்பாக்கிய நிலையும் வரலாம்! 'ஆளும் கட்சி' 'எதிர்க்கட்சி' எல்லாம் கலைக்கப்பட்டுப் புதுத்தேர்தல் வைபவமும் வரலாம்! இன்றுள்ள நிலையில் எதுவும் வரலாம்! எதுவும் வராமலுமிருக்கலாம்!

பிரகாசம் கம்யூனிஸ்டு வலையில் சிக்கிச் சீரழிவதைப் பார்க்கச் சகிக்காமல் ஹைதராபாத் ராமானந்த தீர்த்தர் முதல் இங்கேயுள்ள 'ஸ்திர சர்க்கார் விரும்பி'வரை குடம் குடமாகக் கண்ணீர் விடுவதை நாம் பார்க்கிறோம்! குழாய்களில் சொட்டு சொட்டாககூடத்தண்ணீர் வராத இந்நாளில் கண்ணீர் குடம் குடமாச் சொரியும் சேதி நமக்கு ஆச்சரியத்தைத் தரத்தான் செய்யும்; புரபஸர் ரங்கா காங்கிரஸ் ஆட்சியின் அட்டூழியத்தை ஒருபுறம் கண்டிக்கிறார்; கம்யூனிஸ்டு

களின் மாயா ஜாலத்தை மறு புறம் தாக்குகிறார்! இவர் 'திரிசங்கு' நிலையைக் கண்டு காங்கிரஸ்காரர்கள் சிரிக்கிறார்கள்! ஆந்திரத்தலைவர்கள் செய்யும் திருவிளையாடல்களைத் தொகுக்க வேண்டுமானால் 'பரஞ்சோதியார்' ஒருவர் போதாது! காங்கிரஸ் காரர்களைப் பிரகாசம் அழவைக்கிறார்; ரங்கா சிரிக்கவைக்கிறார்! எத்தனை அருமையான திருவிளையாடல்!

மெஜாரிட்டிக் கட்சி தான் மந்திரிசபை அமைப்பது என்றில்லாமல், மைனாரிட்டிக் கட்சி தான் மந்திரி சபை யமைப்பது என்று விதியைத் திருத்தி விட்டால் எவ்வளவு நன்மையாயிருக்கும்? ரங்கா உடனே மந்திரியாகி விடலாம். 'காமன் வீல்' காபினெட் ஏற்படலாம். லீகர்களின் ஆட்சி ஏன் ஏற்படாது? 'அம்பேத்காரும்' சென்னை மாகாணத்தை ஒரு கை பார்க்கலாம். ஆனால் சுயேச்சையாளர்கள் அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால் 'ஒன்று சேர' மாட்டார்கள்! தனித்தனி தான்! அப்படி நின்றால் தான் அவர்களுக்கு 'சான்ஸ்' அதிகம். ஒவ்வொருவரும் ஒவ்வொரு மந்திரி சபை அமைக்கலாமல்லவா? அப்பொழுதும் அறுபத்து மூவரில் யாரைக் கவர்னர் அழைப்பார்? எல்லோரும் ஒருவருக்கொருவர் நிகர்தானே! இத்தொல்லையெல்லாம் தீரவேண்டுமானால் 375 பேரையும் மந்திரிகளாக்கி விடுவதே உத்தமம்! இந்த வழி யார் காதில் விழப்போகிறது!



கோனாபட்டு வித்துவான் விசு. திருநாவுக்கரசு அவர்களின் குழந்தை செல்வி **அலமேலு** புதுமை விழா 6–2–52 அன்று மிகச் சிறப்பாக நடந்தேறியது. நண்பர்கள், உறவினர்கள், சட்டசபை உறுப்பினர்கள், கல்வி இலாகா அதிகாரிகள் பலரும் வந்திருந்து குழந்தையை வாழ்த்தி விழாவைச் சிறப்பித்தனர். திருவாளர்கள் ஆர். கே. சண்முகம் செட்டியார், பண்டிதமணி கதிரேசச் செட்டியார், டாக்டர் மு. வரதராசன், ராஜா சர் முத்தையா செட்டியார், திருக்குறள் முனிசாமி, கி. ஆ. பெ. விசுவநாதம், சொ. முருகப்பா, விந்தன் முதலிய பெருமக்கள் தங்கள் வாழ்த்துச் செய்திகளை அனுப்பி வைத்திருந்தனர்.

வாழ்க பல்லாண்டு

**செல்வி அலமேலு!**

மு. அண்ணுமலை.

# சிநேகிதி

[வெளியிட்டவர்கள் : பழனி பிரசுரம்—புதுக்கோட்டை விலை ரூ. 2-8-0]

வளரும் இலக்கியம்

பண்பாடடைந்த உள்ளத்தையும் செயற்கரிய செயல் செய்பவர்களையும் நாம் வாழ்க்கையில் அடிக்கடி காண்பதில்லை. "காணவே மாட்டோமா?" என்ற இரக்கம் கலந்த கேள்விகளை இலட்சிய எழுத்தாளர்கள் எழுப்புகின்றனர். மனித உள்ளம் இருளடைந்த வாழ்க்கையையே கண்டு, சாக்கடைச் சிந்தனைகளிலே மூழ்கி நசித்துவிடாமல், உயர்ந்த எண்ணங்களைச் சாதிக்கும் கதைஉறுப்பினர்களைச் சிந்தித்துப் பார்த்தாவது மனத்தை ஏன் செம்மைப்படுத்திக்கொள்ளக்கூடாது? அதனுல் தான் பல நாவல்கள் இலட்சிய உலகிலிருந்து பல கதைஉறுப்பினர்களைக் கூட்டி வந்து காட்டுகின்றன.

அப்படிப்பட்ட நாவல்களிலே ஒன்ருக அகிலனின் நாவலான 'சிநேகிதி'யைக் குறிப்பிடலாம்.

ஒரு எழுத்தாளன் மணமான ஓரிளம் பெண்ணோடு பழகும் வாய்ப்பைப் பெறுகிருன். அப்பெண்ணின் கணவராக வரும் நாராயணசாமியே அவளை அவனுக்கு அறிமுகப்படுத்துகிருர். வயதாலும் அறிவாலும் மூத்த அவர் பெருந்தன்மையான மனிதர். எல்லோரும் தோல்வி என்று கருதக்கூடியது எதுவோ அதை வாழ்க்கையின் வெற்றியாகக் கருதி ஏற்கிருர். எழுத்தாளனுக்கும் அவரது இளம் மனைவிக்கும் இடையே தோன்றிய நட்புறவு காதலுறவாக மாறி உரப்பெறும்வரை மிக அமைதியாகக் கவனித்து வருகிருர். மனத்தில் எந்தவிதமான குழப்பமும் இல்லை. மனித இயல்பையே வென்று உள்ளத்தை அடக்கிஆள அவரால் முடிகிறது. மனைவியின் காதலை மகிழ்ந்து வரவேற்று, அவர்களுக்கிடையே நில்லாமல் விலகிக்கொண்டு ஆசீர்வதிக்கிருர்.

தமிழ்மண்ணை விட்டுப் பர்மாவுக்குச் செல்லும்போது " தமிழ் நாட்டுக்குத் திரும்பி வரமாட்டேன்; ஆனுலும் அடிக்கடி கடிதங்கள் எழுதிக்கொண்டிருப்பேன். நீங்களும் மறுமொழி எழுதுங்கள் " என்று கூறும் நாராயணசாமியை நாம் மறக்கமுடியாது.

பௌத்த நூல்களையே விரும்பிப் படிக்கும் நாராயணசாமியின் முகத்திலும் புத்தரின் சாந்தமே உருவாகியிருக்கக் காண்கிறோம். நாவலைப் படித்து முடிக்கும்போது எல்லாக் கதைஉறுப்பினர் களும் மறைந்துவிடுகின்றனர். அப்பொழுது நாராயணசாமியும், அவரது பேச்சுக்களும், பண்பாடடைந்த உள்ளமுமே நம்மை ஆட்சிபுரிகின்றன. நாராயணசாமியின் பெருந்தன்மையை வெளிப் படுத்தும் கருவிகளாகவே எழுத்தாளனும் லலிதாவும் தோன்று கிறார்கள்.

எழுத்தாளனும் லலிதாவும் மிருகத்தனமான காதல் நாடகங் களில் ஈடுபடவில்லை. அவர்களுக்கிடையே தோன்றிய புனிதமான நட்புணர்ச்சி காதலால் இடையிடையே தடைப்படுத்தப்படுகிறது. நட்புணர்ச்சி காதலுக்குள் ஐக்கியமாகிவிடப் பார்க்கிறது. ஆனால் இருவரும் அந்த 'ஐக்கியத்தை' எதிர்த்துப் போரிடுகின்றனர். தங் களிடம் அறியாமல் தலைதூக்கும் காதலுணர்வை அழித்து ஒழிக் கவே ஒவ்வொரு சமயமும் போராடுகின்றனர். இறுதிவரையிலும் அதே போராட்டம்தான். நாராயணசாமிதான் அவர்களின் ஆற்றாமையையும் உள்ளத் துடிப்பையும் உணர்ந்து மனமிரங்கி அவர்களது காதலை அங்கீகரிக்கிறார். காதலுக்கு மாலை சூட்டுகிறார்.

மனித வாழ்க்கைக்கும் ஒழுக்கமென்னும் கட்டுப்பாட்டிற்கும் உள்ள தொடர்பை அகிலன் நன்கு சிந்தித்துப் பார்க்கிறார். ஒழுக்கத்தை உதறிவிட்டுச் சமூகம் தனித்து வாழமுடியாது என்பதை அவரால் உணர முடிகிறது. அதனால்தான் அவரது காதலர்கள் நேர்வழியிலேயே இறுதிவரை நிற்க முயல்கின்றனர்; உடலாசையை வெல்லத் தலைப்படுகின்றனர்; 'கணவன்' என்ற சமூக உரிமையினின்று நாராயணசாமி விலகிக்கொள்ளுவதும், அவர் நீங்கிய பின்னரே ஆசிரியர் காதலைக் கைகூட்டி வைப்பதும் ஈண்டு ஒப்புநோக்கத் தக்கதாகும்.

கந்தல் ஜிப்பாவையும் காகிதத் துண்டுகளையும் வர்ணித்த வுடனே ஒரு எழுத்தாளனை உண்டாக்கிவிட்டதாக நினைக்கும் ஆசிரியர் பலருண்டு. ஆனால் அகிலன் காட்டும் எழுத்தாளன் அந்தப் பெயருக்குள்ள தகுதியைச் சரியாக நிர்வகிக்கிறான். வாழ்க் கையில் உள்ள பல பிரச்சினைகளைப்பற்றியும் பேசுகிறான். 'கலை வாழ்க்கைக்காகவா அல்லது கலை கலைக்காகவா?' என்று விமரிசனம் செய்கிறான். கடவுள், காண்டேகர், புத்தர் இப்படிப் பலர் அவன் ஆராய்ச்சிக்குட்பட்டுச் செல்கிறார்கள். அவன் பழகும் குடும்பமும் சிந்திக்கப் பேசத்தெரிந்த கலைக்குடும்பமாகவே இருக் கிறது.

'கதையில் வரும் எழுத்தாளன் நானல்ல' என்று அகிலன் குறிக் கிறார். எழுத்தாளனின் தனிப்பட்ட வாழ்க்கை அகிலனுக்குச்

சொந்தமானதன்றி வேண்டுமானால் இருக்கலாம். எழுத்தாளனின் ஊரும் உள்ளமும் நிச்சயமாக அகிலனுடையனவே!

லலிதாவின் சோகமயமான தோற்றமே எழுத்தாளனின் உள்ளத்தைக் கவர்கிறது. அமைதியிலும் சோகத்திலும் மறைந்திருக்கும் அழகைக் கண்டுபிடிக்கிறான் எழுத்தாளன்.

மற்ற கதாபாத்திரங்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் கதை நடக்கும். அவர்களால் சிறிதே கதை பாதிக்கப்படுகிறது.

நாவலின் எடுப்பும் முடிப்பும் மிக நன்று. இடையிடையே சிறிது விறுவிறுப்புக் குறைவதை ஆசிரியர் உணரவேண்டும்.

வந்திருக்கும் சில தமிழ் நாவல்களிலே குறிப்பிடக்கூடிய பெருமையைச் 'சிநேகிதி' பெறுகிறது. இந்நாவலில் அகிலனின் வளம்பெற்ற உள்ளத்தைக் காண்கிறோம். மற்றநாட்டு எழுத்தாளர்களின் ஆரவாரத்தில் ஆசிரியர் மயங்கிவிடாமல் தமிழ்த் தனித்தன்மையை நிறுவியிருக்கிறார்.

எளிமையும் தெளிவும் நிறைந்த அகிலனின் நடையைப்பற்றி அதிகம் பேசவேண்டியதில்லை.

---


சென்னைநகரில் கீழ்க்கண்ட இடங்களில்
**"பொன்னி வெளியீடு"கள்**
கிடைக்கும்

★

**எஸ். வைத்தியலிங்கம்**
59, எம். சி. ரோடு
வண்ணாரப்பேட்டை

**கே. சங்கர நாயர்**
ராயபுரம் நியூஸ் மார்ட்
**மன்னார்சாமி கோயில் தெரு,**
ராயபுரம்

**சாமி நியூஸ் மார்ட்**
மவுண்ட் ரோடு

**சாமி நியூஸ் மார்ட்**
செயிண்ட் சேவியர் தெரு
சென்னை

**கே. நயினியப்பன்**
21, ஜோன்ஸ் ரோடு
சைதாப்பேட்டை

---

கீழ்க்கண்ட ஊர்களுக்கு
**'விருந்து'க்கு**
முன்பணம் கட்டக்கூடிய
விற்பனையாளர்கள் தேவை

பொள்ளாச்சி
சேலம்
திண்டுக்கல்
கரூர்
கோயில்பட்டி
மன்னார்குடி
மாயவரம்
பெண்ணாடம்
ராசிபுரம்
வேலூர்
கும்பகோணம்

# பொடி டப்பா

சுலோசனா

"பேய் பூதங்கள் ஊளையிட்டு நடமாடித் திரியும் பயங்கர இருள் என்பார்களே — அதே இருள்தான் அன்று...... ஆனால் பேய்பூதங்கள்தான் ஊளையிட்டனவோ என்னவோ, பயங்கர இருட்டின் பயங்கரநிசப்தத்தைக் கலைத்துக்கொண்டு இடையிடையே ஒலித்த ஊளைச் சப்தங்கள் மனித நெஞ்சில் திகிலைப் பாய்ச்சிவிட்டன. நாய்களின் ஊளைகளும் ஆந்தைகளின் அலறலும்தான அந்த விபரீத ஒலிகளென்று நீலனுக்குத் தெரியும். என்றாலும் உள்ளூற அவனுக்கும் சிறிது திகில்தான்.

ஊரின் வெளிப்பகுதி—சுற்றிலும் காடுசூழ்ந்த தனிமையான இடம். இருளையும் கீறிக்கொண்டு ராட்சஸ பூதம்போல் காட்சியளித்தது அந்த 'ஒற்றை' வீடு. இருளில் பழக்கப்பட்ட ஜீவனின் கண்கள் அவ் வீட்டை வெறிக்க நோக்கியபடியிருந்தன. அவன் கால்களோ அத்திசையை நோக்கியே ஓசையின்றி நடந்துகொண்டிருந்தன. அமாவாசை நள்ளிரவில் ஊருக்கு வெளியே தன்னந்தனியே காட்டின் மத்தியிலிருக்கும் அந்த வீட்டிற்குத் தனிமையாகச் செல்லவேண்டுமெனில்... தகுந்த காரணமில்லாமல் செல்வானா?

காரணம் இருந்தது. அச்சம் என்பது இன்னதென்றறியாத நீலனின் ஆழ்ந்த நெஞ்சிலிருந்து ஒரு சிரிப்பு வெடித்துக் கிளம்பியது.

நீலன் திருடன்! மனச்சாட்சியற்ற கொடிய கள்ளன். நெடு நாட்களாக அந்த 'ஒற்றை' வீட்டின்மீது அவனுக்குக் கண். வீட்டுக்கார முத்தையாத் தேவர் மீதும் கண்தான்! அந்தக் கொடிய கண், தேவரையும் அவர் வீட்டையும் துழாவித் துழாவி முடிவில் தான் தேடிய 'பொருளை'க் கண்டுபிடித்துவிட்டது! அந்தப் பொருள் வேறொன்றுமில்லை — இறந்துபோன தன் அருமை மனைவியின் ஐம்பதினாயிரம் ரூபாய் மதிப்புப் பெறும் நகைகளை வெகு ஆசையாக ஒரு இரும்புப் பெட்டிக்குள் வைத்துப் பூட்டியிருந்தார் தேவர். அந்தப்பெட்டியை நீலன் விரும்பினான்! திருடன் வேறெதை நாட முடியும்? அப்பெட்டியைக் கைமாறச் செய்ய நீலன் கங்கணம் கட்டிக்கொண்டான்! அன்று அது பலித்தது.

மாடியில் ஒரு இருண்ட அறை. கரிநிழலைப் போல உள்ளே நுழைந்தான் திருடன் நீலன். யாரும் தன்னைக் கவனிக்கவில்லை என்பது ஊர்ஜிதமானதும் தன் 'கைத்திறனை'க் காட்ட ஆரம்பித்தான். வியர்வை பெரிதாக அரும்பித் தரையில் வீழ்ந்தது. கடைசியில்—பெட்டி அவன் கையில்! ஐம்பதினாயிரம் ரூபாய் அவன் மடியில்! எத்தனை நாள்

பட்ட பிரயாசை! பயன் அன்று தான் கிடைத்தது......!

என்ன அது சப்தம்? நீலன் குதித்தெழுந்தான். யாரோ அவன் முகத்தில் 'டார்ச்லைட்'டைச் சுழற்றியடித்தனர். நீலன் மிரண்டுவிடவில்லை. எதிரே நின்ற மனிதனைச் சீறும் புலிபோல் முறைத்துப் பார்த்தான். முத்தையா தேவர் நின்றுகொண்டிருந்தார்!

"யார் அது? திருடனா...?" மேலே அவர் பேசவில்லை. நீலன் கெட்டிக்காரனல்லவா, சும்மா விட்டு விடுவானா என்ன? மறைத்து வைத்திருந்த கத்தியை வெளியிலெடுத்தான். கண்மூடித் திறக்குமுன் காரியம் நிகழ்ந்து

விட்டது. மறுவினாடி தேவர் தரையில் உருண்டார். ஆற்று வெள்ளம் போல் பாய்ந்த இரத்தம் அவரைச் சுற்றி அழகாகப் பரவியது. நீலன் நிம்மதியாக மூச்சுவிட்டான்!

வேலை முடிந்தது. எல்லாம் எளிதாக நிறைவேறியது. நீலன் தன் வீடுபோய்ச் சேர்ந்தான். எத்தனையோ இன்னல்களிடையே கிடைத்த பொருளை அன்போடு மார்புறத் தழுவிக்கொண்டான்! முகம் மலர்ந்தது; அந்தக் கடின நெஞ்சினனுக்குத்தான் எத்தனை ஆனந்தம்! ஆனால் அந்த ஆனந்தம் நெடுநேரம் நிலைக்கவில்லை. சட்டைப்பையில் பொடி டப்பா இருக்கிறதா என்று கையைப் போட்டுப் பார்த்த பின்னர்தான் அவனது ஆனந்தம் தூள் தூளாகச் சிதறியது!

நீலனின் தடித்த உதடுகள் பிளந்தன. சிவந்த கண்கள் பிதுங்கி வெளியே வந்துவிடுவதாகப் பயமுறுத்தின. முரட்டு நெற்றியில் வியர்வை வெள்ளம் போல் அரும்பியது. நெஞ்சு பயங்கரமாகப் படபடத்தது. காரணம்...?

அவனது பொடி டப்பா எங்கே? ஞாபகம் வந்தது! தேவரின் வீட்டில் இருட்டறையில் இரும்புப்பெட்டியைத் திறக்கும் போது, வியர்வையைத் துடைப்பதற்கெனக் கைக்குட்டையை எடுப்பதற்காகச் சட்டைப் பையில் கைவிட்டபோது பொடி டப்பா அதனுடன் வெளியே இழுபட்டுக் கீழே விழுந்துவிட்

டிருக்கலாம்! என்ன செய்வதென்றறியாது திகைத்தான் ல்ன். விழித்தான்—மருண்டான்—பயந்தான்!

அந்த வெள்ளிப் பொடிடப்பாவில் அவனது பெயரும் வீட்டு விலாசமும் பொறிக்கப்பட்டிருந்தன! தேவரின் சடலத்தைச் சோதிக்கவரும் போலீஸார் அதைக் கண்டுகொண்டால் அவனது கதி? யாரோ குளிர்ந்த கரத்தால் தொண்டையை நெரிப்பது போலிருந்தது நீலனுக்கு. உடல்பதற ஆரம்பித்துவிட்டது. எவ்வளவோ பிரயாசைப்பட்டு—எத்தனையோ நாட்கள் காத்திருந்து காரியத்தை வெற்றி பெறச் செய்தான். ஆனால் இந்த ஒரே வினாடியில் தனது 'பொடி டப்பா' அதைச் சின்னாபின்னமாக்கிவிடுமென்று அவன் கனவா கண்டான்? இனி என்ன செய்வது? நீலன் யோசிக்கவில்லை. அவன் துணிந்துவிட்டான்! தனது உயிரைக் காப்பாற்ற வேண்டுமெனில் மறுபடியும் அந்த 'ஒற்றை' வீட்டிற்குப் போகவேண்டும்; பொடி டப்பாவை எடுத்து வரவேண்டும். நீலன் கடிகாரத்தை நோக்கினான். மணி இரண்டு! இன்னும் எவ்வளவோ நேரம் இருக்கிறதே...! நீலன் திரும்பினான்—வந்த வழியே. ஆனால் முன்னைப் போல் தைரியம் இல்லை. அவனது கலங்கா நெஞ்சைப் பொடிடப்பா கலக்கி விட்டுவிட்டது!

இருட்டறைக்குள் பிரவேசித்து விட்டான் நீலன், ஆபத்துக்களையும் கடந்து! இனிப்பயமில்லை! ஆனால் பொடிடப்பா எங்கே? கையில் கொண்டுவந்த மங்கிய டார்ச்லைட்டின் உதவியால் அங்குமிங்கும் தேடினான். கீழே உயிரற்றுக் கிடந்த தேவரின் சடலம் திடீரென்று அவனைத் திகிலடையச் செய்தது. அவனது உள்ளமும் செத்துவிட்டது. உடல் பனி போல் விறைத்துவிட்டது. பதட்டத்துடன் தேட ஆரம்பித்தான்.

ஊஹூம்! டப்பா கிடைக்கவில்லை!



"இந்தச் சினிமாவிலேதான் 'அவர்' என்னை வந்து சந்திக்கச் சொன்னார்."

"என்னிடமும் 'அவர்' அப்படித்தான் சொன்னார்"

---

"ஏய்! யாரது?"

சட்டென்று அறையின் விளக்கு போடப்பட்டது. நீலன் பதைக்கும் மனத்தோடு திரும்பினான்.

தேவரின் மகன் கையில் துப்பாக்கியோடு வாசலில் நின்றுகொண்டிருந்தான்! துப்பாக்கியை எதிர்க்க நீலன் யார்?... ஆம்! அவனுடைய வாழ்க்கை நசுக்கப்பட்டுவிட்டது!

விடிந்தது. போலீஸார் நீலனின் கைகளில் விலங்குபோட்டு அழைத்துச் சென்றனர். அவன் செத்தவன் போல் அவர்களின் மத்தியில் தள்ளாடித் தள்ளாடி நடந்து சென்றான். பொடிடப்பா அவனை வஞ்சித்துவிட்டது! நீலன் பொடிடப்பாவை மனதிற்குள் வைதான். அஃதன்றோ அவனைத் தூக்குமரத்திற்கு அனுப்புகிறது!

தனது வீட்டை நெருங்கியதும் நீலனின் நடை தடைப்பட்டது. கான்ஸ்டபிளின் முகத்தைப் பரிதாபமாகப் பார்த்தான். அவனது குரூரமான முகத்தில்தான் எத்தனை மாறுதல்!

"ஐயா, ஒரு கடைசி வேண்டுகோள். நான் ஒருதடவை என் வீட்டையும் மனைவியையும் பார்த்து வரலாமா?" கொலைபாதகனின் கெஞ்சுதல் கான்ஸ்டபிள்களின் மனதை உருக்கிவிட்டது.

"சாகப்போகிறவனின் கடைசி ஆசையைத் தடை செய்யவில்லை. அப்படியே செய்யலாம்!" என்று அவர்கள் பதிலுரைத்தனர். போலீஸ்காரர் சூழ்ந்து வரத் நீலன் தன் வீட்டிற்குள் நுழைந்தான். நெஞ்சு படபடவென்று அடித்துக்கொண்டிருந்தது. வியர்வை நீர்வீழ்ச்சியாகப் பாய்ந்தது!

முன்னறையினின்றும் அப்பால் அவன் நகரவில்லை. அங்கு அறையின் நடுவே அவன் கண்ட காட்சி, அவனை அப்படியே தூக்கியடித்து நிலைகுன்றச் செய்துவிட்டது...

அது என்ன காட்சி?

அவனது வெள்ளிப் பொடிடப்பா அறையின் நடுவே மின்னிக்கொண்டு கிடந்தது! மறுகணம் வீடே கிடுகிடுத்தது...

"ஆ, என்ன அநியாயம்!" என்று அலறிக்கொண்டே அடியற்ற நெடுமரம்போல தரையில் விழுந்தான் நீலன்.

போலீஸார் கருத்தறியாமல் விழித்தனர்!

# பொழுது போக்கு

ராதா

## அமரகவி

வெகுநாட்களாகப் பொதுமக்களால் பேராவலுடன் எதிர்பார்க்கப்பட்ட படம் 'அமரகவி!' பாகவதர் நடித்த படங்கள் நீண்ட நாட்களாகத் திரைக்கு வராததாலும் அவரின் பாடல்களைக் கேட்க ரசிகர்களின் ஆசை கரைபுரண்டிருந்ததாலும், 'அமரகவி' மக்களிடம அமோக ஆதரவைப் பெற்றுவிட்டதில்வியப்பொன்றுமில்லை. படம் சிறிது நீளமாக இருப்பினும், பாகவதரின் பாடல்களும், என் எஸ். கே. யின் நகைச்சுவையும் அலுப்பு ஏற்படாதபடி தடுக்கின்றன! பாதிப் படத்திற்குமேல் அடுத்து என்ன நிகழும் என்ற கேள்விக் குறியுடன் செல்லுகின்றது கதை!

தேரோட்டம் நடக்கிறது. தேர்ச் சக்கரத்தில் அகப்பட்டுக் கொள்ளவிருந்த அனாதைச் சிறுவன் அமரனை முத்துச்சாமி என்னும் பூசாரி காப்பாற்றித் தன் வீட்டிலேயே வைத்து வளர்த்து வருகின்றான். பூசாரியின் மகள் பத்மினியும், அமரனும், சிறு வயது முதற்கொண்டே ஒன்றாக விளையாடி வளர்ந்து வருவதால், அப் பிஞ்சு உள்ளங்களிடையே முகிழ்த்த அன்புமொட்டு, பெரியவர்களானதும் காதலாக மலர்ந்துவிடுகின்றது. அக்காதல் மலரைக் கசக்கி முகர்ந்துவிடுகிறாள் - பத்மினியின் தாய்! இதன் காரணமாக அமரன் வீட்டைவிட்டு வெளியேறி நாடோடியாகத் திரிகின்றான். மன்னன் கீர்த்திவர்மன் மகள் மல்லிகாவின் பிறந்தநாட் கொண்டாட்டத்தில் நடந்த கவிதைப் போட்டியில் வெற்றிபெற்று, மல்லிகாவையே மணந்து நாடோடியாக இருந்த அமரகவி நாடாளும் இளவரசனாகிறான். வேறொருவனை மணந்த பத்மினி விதவையாகிவிடுகின்றாள். அவளும் அவள் தகப்பனும் ஊர் ஊராகப் பிச்சை எடுத்துக் கொண்டு வரும்போது அமரகவி இளவரசனாக இருப்பதையறிந்து, அரண்மனைக்குள் நுழையும்போது தடுக்கப்படுகின்றனர். பின்பு, பத்மினி ஆண்-

உடைதரித்து, ஊமையைப் போல் நடித்து மந்திரி தூமகேது விடம் வேலைக்கமர்கின்றாள்; அப்போது அரசபீடத்தைக் கைப்பற்றத் தூமகேது செய்யும் சூழ்ச்சிகளை யெல்லாம் தெரிந்து கொள்ளுகின்றாள்.

மந்திரியின் அட்டகாசத்தால் மக்கள் படும் துன்பங்களைக் காணச் சகியாத அமரகவி, அவர்களின் துன்பத்தைத் துடைப்பதே தன் கடமையெனக் கருதி இரவோடு இரவாக அரண்மனையை விட்டு வெளியேறி மக்களிடம் அரும்பியிருந்த மூட வழக்கங்களை ஒழித்துக்கட்டி மக்கள்சமுதாயத்திலே ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்குகின்றான். அமரகவியின் புகழைக் கேள்விப்பட்ட தூமகேது துடித்துப்போகின்றான். தந்திரமாக அமரகவியைக் கைதுசெய்து, பலவித தண்டனைகளை அளித்ததோடு, நெருப்பிலிட்டுப்பொசுக்கி விடுமாறும் உத்தரவிடுகின்றான். முடிவில், ஆண் உடையில் இருந்த பத்மினியால், உண்மைகள் வெளிப்பட்டு, அமரகவியின் குடும்பம் ஒன்று சேருவதாகக் கதை!

‘அமரகவி’யில் பாகவதரும் ராஜகுமாரியும்

பாகவதர் தன்னால் முடிந்த வரை முயற்சித்து நடித்து நன்கு பாடி, மக்களின் நன்மதிப்பைப் பெற்று, மக்கள் மன்றத்திலே தனக்குள்ள நல்ல பெயரைக் காப்பாற்றிக்கொள்ளுகின்றார். பாடும் பாடல்களும் செவிக்கினிமை தருவதுடன், பழைய பாணி சிறிதும் குறையாமல் இருக்கிறது. நடிப்பில் ராஜகுமாரிக்குத்தான் முதல்மார்க்! காதலனுடன் கொஞ்சுமொழிகளில் பேசும்போதும், ஊமையாக நடிக்கும்போதும், விதவையாகிக் கண்ணீர் விடும்போதும் தான் ஏற்றுக்கொண்ட பாத்திரத்தை உணர்ந்து நடிக்கிறார். சக்ரபாணிக்கும், சரஸ்வதிக்கும் நடிப்பதற்குப் போதிய சந்தர்ப்பங்கள் இல்லை. இருப்பினும் குறைசொல்ல முடியாத வகையில் நடித்திருக்கிறார்கள். கலைவாணர் கிருஷ்ணன் தம் நகைச்சுவையால் நம்மை யெல்லாம் வயிறு குலுங்க நகைக்கவைக்கிறார் மனிதனைக் கடவுள் ஆக்காதே என்று மக்களுக்கு அறிவுறுத்தி, சமதர்மக்கொள்கையை வாழைப் பழத்தில் ஊசி ஏற்று

வது போல் சேர்த்துத் தருகிறார் நகைச்சுவைப் பகுதியிலே! "காக்காய்க் கறிசமைத்துக் கருவாடும் தின்பர் சைவர்" என்ற அடிக்கு விளக்கம் தருவதும், "எல்லாம் துன்ப மயம்" என்று பாடும் பாட்டும் ரொம்பத் தமாஷ்!

வசனங்களை அமைத்த 'சுரதா' வின் கைச்சரக்கு ஆங்காங்கு பளிச்சிடுகின்றது. "அறிஞர்களுக்கும், அயோக்கியர்களுக்கும், அவர்களின் சாவுநேரம் அநேகமாக நல்லதாக இருப்பதில்லை," "புரிந்துகொள்ளாத போதும், பொறாமைப்படும் போதும், மனிதன் மற்றவர்களை முட்டாளாகக் கருதிவிடுகின்றான்", "புகழ் என்பது ஒருவன் தன்னோடு வைத்து வளர்க்கும் சொந்தஆபத்து", "துன்பம் என்னை அழ வைக்கிறது. ஆசை என்னை வாழச் சொல்லுகிறது. வாழ்க்கை என்னை வேதனைப் படுத்துகிறது" என்ற வசனங்கள் நம் சிந்தனையைக் கிளறிவிடுகின்றன.

படத்தில் அவசியமற்ற சில காட்சிகளும் இல்லாமலில்லை. சான்றுகப் பாகவதரும், சரோஜாவும் செல்லும் படகுக் காட்சி அவசியமற்றது! அப்படி அவசியமென்று டைரக்டருக்குத் தோன்றியிருக்குமாயின், அதை நல்ல கோணங்களில் கவர்ச்சிகரமான முறையில் எடுத்திருக்கலாம், மந்திரிகுமாரி படத்தைப் போன்று! இக்காட்சி ஸ்டூடியோ விலேயே எடுக்கப்பட்டதென்

## மணிமேகலை

நண்பர் சி. கே. ராதாகிருஷ்ணன் அவர்களின் துணைவியார் ஒரு பெண் மகவுக்கு அன்னையாகியுள்ள நற்செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். குழந்தைக்கு **மணிமேகலை** என்று பெயரிட்டப்பட்டிருக்கிறது.

பதைப் பின்னாலுள்ள திரைச் சீலைகள் பறையறைவிக்கின்றன.

பாகவதரின் பாடலுக்காக, பார்த்தவர்களையே மீண்டும் ஒருமுறை பார்க்கத் தூண்டுவார் இந்த "அமரகவி"

## அரக்குமாளிகை

சென்னை ஒற்றைவாடையில் சென்ற 16, 17 தேதிகளில் மறுமலர்ச்சி நாடக மன்றத்தார் நடித்த "அரக்குமாளிகை" குறிப்பிடத்தக்க நாடகமாகும். நடிப்புத்துறைக்கே புதியவர்களான பலர் நடித்தும்கூட, நாடகம் பாராட்டத்தக்க விதத்தில் அமைந்திருந்தது. நண்பர் இராதாமணாளன் தீட்டிய இந்த நாடகம் சரித்திரக் குறிப்புகளை ஆதாரமாகக் கொண்டது. அக்கினிமித்திரன் அரச பதவி பெறும் சூழ்நிலையை விளக்குவதுதான் கதை! கதையமைப்பும், உரையாடல் நயங்களும் சிறக்கத் திகழ்ந்தன. நாடகத்திற்கேற்பச் சில மாறுதல்களைச் செய்துகொண்டால் "அரக்குமாளிகை" உன்னதமான நாடகமாகத் தமிழகத்தில் பவனிவர முடியும் என்பது உறுதி.

# 209

Persons are awarded prizes in our Puzzle No. 3 (1st prize 151, 2nd prize 2,3rd prize 36 persons V prize 20 persons)

**Full particulars are published in the Rainbow dated *25-2-52***

ரிஜிஸ்டர் நெ. 277 ரூ. **25,000** பரிசு போட்டி நெ. 5

MS Premier Bank of India Ltd-ல் சீல் செய்துவைக்கப் பட்டுள்ள சரியான விடை அவர்கள் அங்கீகாரத்தின்பேரில் பிரசுரிக்கப்படும். முற்றிலும் சரியான விடை அனுப்புபவர் களுக்கு முதல் பரிசு ரூ. 12,000. முதல் இரண்டு வரிசை சரியான விடைக்கு இரண்டாம் பரிசு ரூ. 7000. முதல் ஒரு வரிசை சரியான விடைக்கு மூன்ரும் பரிசு ரூ. 3000. முதல் மூன்று நம்பர் சரியானவிடைக்கு நான்காம் பரிசு ரூ. 2000 முதல் இரண்டு நம்பர்கள் சரியான விடைக்கு 5 பரிசு ரூ. 1000 அளிக்கப்படும். எங்கள் ஸீல் வைத்த விடைகளபடி எல்லாம் சரியாக இருக்க வேண்டும். மேற் கண்ட பரிசுகள் வகஅுக்கு தகுந்தபடி பகிர்ந் , கொடுக்கப்படும்.

**AMBAL'S PUZZLES**

KEY S. NO. 3 *10 TO 25=70

| | | | |
|---|---|---|---|
| 22 | 17 | 21 | 10 |
| 12 | 19 | 15 | 24 |
| 11 | 20 | 16 | 23 |
| 25 | 14 | 18 | 13 |

We hereby certify that the above is the solution in original deposited with us by *Ambal's Puzzles No.* 3 on 21/1/52 in a sealed cover which was opened in our presence to-day and that a copy of the above solution has been lodged with the Bank.

*For The Premier Bank of India Ltd.*

V. Ramanathan
17-2-52
*Agent, Madras.*

முடிவு தேதி 12–3–52 விடை 27–3–52

பிரவேசக் கட்டணம் : கூபன் *1*-க்கு ரூ. *1-0-0* 6 கூபன் கொண்ட ஸெட் 1-க்கு ரூ. 5-0-0

**78**

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:— 12 முதல் 27 வரையுள்ள எண களைக் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டங்களில், மேலிருந்து கீழும், இட மிருந்து வலமும், குறுக்காகவும் எப்படிக் கூட்டினலும் 78 வரும்படி யாக அமைக்க வேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோ கிக்க வேண்டும்.

விதிகள்:— தனி வெள்ளைக் காகிதத்தில் தேவையான கட்டணத்துடன் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானலும் எழுதி அனுப்பலாம். ஒவ்வொரு கூப்பனிலும் பெயர், விலாசம், எண்கள் எல்லாம் ஆங்கிலத்தில் விளக்கமாக எழுதப்பட வேண்டும். பிரவேசக் கட்டணத்தைக் கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டர் மூலமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்பலாம். மணியார்டர் செய்த ரசீதைக் கூபனகளு டன் சேர்த்து அனுப்ப வேண்டும். வசூலுக்குத் தகுந்தபடி, பரிசு பகிர்ந்து அளிக்கப்படும். போட்டி சம்பந்தமாக மானேஜர் தீர்ப்பே முடிவானது; சட்டபூர்வமாய்க் கட்டுப்படுவது மாகும். போட்டி முடிவு RAINBOW மாதமிருமுறைப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும். அல்லது 4 அண ஸ்டாம்பு அனுப்பினல் விடை அனுப்பப்படும்.

கூபன்கள் அனுப்பவேண்டிய விலாசம் :—

## AMBAL PUZZLE NO. 5

**28 (14) Thandavaraya Gramani Street. Tondiarpet, MADRAS - 21**

*Edited, Printed and Published by Murugu Subramanian for Ponni Ltd., at* ***Ponni Achakam. 16, Seni Amman Koil Street, Tondiarpet, Madras-21.***

197806



'வேடிக்கையா ? வேதனையா ?'

— காதலில் ரசமான கட்டம்

'கட்டுண்டோம் ; பொறுத்திருப்போம்'

— தாயுள்ளத்தில் ஒரு காட்சி

தமிழ் இலக்கிய உலகிலே ஒரு புதுமையை ஏற்றித்தர விருந்து இதழ்கள் திங்கள்தோறும் மலர்ந்து வருகின்றன. அறிஞர்களும் கலைஞர்களும் பலபடப் பாராட்டியுள்ளனர். அண்டை மொழி இலக்கியப் படைப்புக்களை நந்தம் தமிழ் மொழியிலே காணும் அரிய வாய்ப்பைத் தமிழர்களுக்கு — வழங்குகிறோம். —

பதிப்பாசிரியர்: பன்மொழிப்புலவர் **கா. அப்பாத்துரை M.A.L.T.**

இப்பொழுது எங்கும்

விற்பனையாகிறது

**7**

**தாயகத்தின் அழைப்பு**

**தாமஸ் ஹார்டியின் ஆங்கில நாவல்**

- **இந்துலேகா** — சந்துமேனேன் தீட்டிய மலையாள நாவல்
- **மாமனார் வீடு**—ஆலிவர் கோல்டுஸ்மித் வரைந்த ஆங்கில நாடகம்
- **துன்பக்கேணி**—யாமதா ககாஷி எழுதிய ஜப்பானியக் கதை
- **நூர்ஜஹான்**—துவிஜேந்திரலால் ராய் எழுதிய வங்காளி நாடகம்
- **கைக்கடிகாரம்**-ஒப்பற்ற ரஷ்யச் சிறுகதைகள்
- **முத்துமாலை**—இரு சீனக்கதைகள், ஒரு நாடகம்

**தனிப்பிரதி விலை அணா 8**

**விவரங்கட்கு :**

**பொன்னி லிமிடெட்,**

**16, சேணியம்மன் கோவில் தெரு,**

**தண்டையார்ப்பேட்டை, சென்னை-21.**